

சரவணை – பள்ளம்புலம்
அருள்மிகு முருகமூர்த்தி தீருக்கோவில்

சித்திரத்தேர் மலர்

06.07.2009

வெளியீடு : அறங்காவற்சபை

ஓ
சிவமயம்



சரவணை – பள்ளம்புலம்

அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில்

சித்திரத்தேர் மலர்

06.07.2009

வெளியீடு : அறங்காவற்சபை

மலரின் உள்ளே ...

1.	ஆசியுரை வேதாகமோத்தும ஆச்சார்யசாரதா சிவாகம கிரியாபரானு சிவாச்சார்ய இருமணி. சிவஸ்ரீ.நா.யோகீஸ்வரக்குருக்கள்	i-ii
2.	வாழ்த்துரை இணைப்பாதிய ஆசிரியர் திரு.ச.மகாலிங்கம் அவர்கள்	iii-iv
3.	சித்திரத்தேர் மலர் வெளியீட்டு வாழ்த்துரை நற்குகோபாலன், பிரதேச செயலர், வேலணை.	v
3.	அறங்காவற் சபையினரிடமிருந்து ....! அறங்காவற்சபை	01-03
4.	உதித்தனன் உலகம் உய்ய! பொறியியலாளர், இன்னைநகர் தலைவர், திரு.ச.இ.சிவானந்தன் அவர்கள்	04-06
5.	சிறுதேர் உருட்டியருளே! கலாபூசணம் அருள்மொழி அரசி லித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அவர்கள்	07-10
6.	தேர் ஊர ஊர் ஏறும்! கம்பவாரிதி திரு.இ.ஜெயராஜ் அவர்கள்	11-12
7.	தேர்த்திருவிழா! சைவப்புலவர் திரு.ம.திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள்	13-16
8.	பள்ளம்புலமுருகனின் தேர்ப்பவனி! அடியார்	17-18
9.	தேர் ஏறிவரும் பார்வதி பாலகன் அடியார்	19
10.	அமரர் திரு.வி.நா.இராமச்சந்திரன் அவர்களை நினைத்து ... அறங்காவற்சபை	20-22
11.	பள்ளம்புல முருகன் தேரேறி வருகிறார் அவரைக் கண்டு தரிசியுங்கள் பலனைப் பெறுங்கள்! இறைதொண்டன்	23-25
12.	தேரின் மகிமையும் தத்துவச் சிறப்பும்! பேராசிரியர் கலாநிதி திரு.இ.கோபாலகிருஷ்ணையர் அவர்கள்	26-29
13.	தேர்த்திருவிழா இறைவனுக்குரிய ராஜோபசாரம்! சிவஸ்ரீ.கா.கைலாசநாதக்குருக்கள் இந்துநாகரீகம் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்	30-33
14.	தேரின் மகிமை! இலக்கியகலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள்	34-35
15.	ஆலயங்களும் அறப்பணிகளும்! அன்னை கலாநிதி செல்லி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்	36-39
16.	பதி! சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர் செ.கந்தசத்தியதாசன் அவர்கள்	40-46
17.	தேர்த்திருவிழாவும் அதன் உட்பொருளும் புலவர் ஏறு திரு.ந.ரா.முருகவேள் ஆசிரியர் திருக்கோவில், சென்னை	47-55
18.	அன்னதானத்தின் மகிமை பக்தன்	56-59
19.	நன்றியுரை	

ஆசியுரை

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

சகல செல்வங்களும் நிறையப் பெற்ற ஈழமணித் திருநாட்டின் வடபால் நாவலர் வாழ்ந்த நல்நகர் யாழ்ப்பாணம் அமைந்துள்ளது. சகல கலைகளும் செழித்தோங்கி வளர்ந்து, சைவமும் தமிழும் இரு கண் களாகப் போற்றப்படுவதும் அறம் வளர்க்கும் சான்றோர்கள், அந்தணப் பெருமக்கள், கவிஞர்கள், தருமவான்கள் என நல்லோர்கள் வாழ்வதுமாகிய வேலணைப் பகுதியில் சரவணை என்னும் கிராமம் உள்ளது. நல்ல நீர்வளம் நிலவளம் பொருந்தியும் மருதமரங்கள், அரசமரங்கள், நிழல் பரப்பும் அழகு பெற்ற பதியாகிய பள்ளம்புலம் எனும் திவ்விய பதி அமைந்துள்ளது. அத்தெய்வீகத் திருப்பதியில் வள்ளி தேவசேனா சமேதராக முருகப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டு வீற்றிருக்கும் அழகிய திருக்கோலக் காட்சி அடியார்கள் உள்ளத்தைப் பரவசப்படுத்து கின்றது.

இவ்வாலயம் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக தொன்மை வாய்ந்த திருத்தலமாகும். அடியார்களது பெருமுயற்சியினால் செங்கல் திருப்பணியாக இருந்த ஆலயம் புதுப்பொலிவு பெற்று கும்பாபிஷேகம் நடாத்தி நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றது. ஆனி மாத பூரணைத் தினத்தை தீர்த்தத் திருவிழாவாக கொண்டு பத்து தினங்கள் மஹோற்சவம் நடைபெறுகின்றது. நித்திய பூசைகள், வழிபாடுகளில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வதே மஹோற்சவமாகும்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களில் அழித்தல் தொழிலை உணர்த்துவது தேர்த் திருவிழாவாகும். பள்ளம்புலம் பதியுறையும் முருகப் பெருமான் ஆலய தேர்த்திருவிழா மிகச் சிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெறுகின்றமை சிறப்பாகும். ஆனால் கட்டுத்தேர் வடம் பிடித்து அடியார்கள் தேரினை இழுக்கும் போது எம் பெருமானுக்கு அழகுமிகு சித்திரத்தேர் அமைய வேண்டும் என எண்ணுவார்கள். "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" என்பது போல அவ் வண்ணமே அடியார்களின் உதவியும் அறங் காவற் சபையினரின் ஆக்கமும் ஊக்கமும் எம்பெருமானின் திருவருள் துணையுடனும் சர்வதாரி வருஷ தைமாத பூச நட்சத்திர தினத்தில் சித்திரத்தேர் செய்வதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பம் அனது. தேர்த் தரிப்பிடம் சிறப்பான கார்த்திகை நக்ஷத்திரத்தில் அத்திவாரம் இடப்பட்டது. இவ்வளவு குறுகிய காலத்தில் நிறைவு பெற்று பள்ளம்புலம் பதியில் அழகிய சித்திரத்தேர் காட்சி தருகின்றது.

தேரின் சில்லுகள் சூரிய சந்திரர்கள் ஆகவும், குதிரைகள் நால்வேதமாகவும் தேர்ச் சாரதியாக பிரம்மாவும் விளாங்குகின்றது. பிரணவமாகிய சவுக்கினால் பிரம்மதேவர் தேரினைச் செலுத்து கின்ற வடிவம் முப்புரங்களையும் புன்சிரிப்புடன் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய அக்கினி

யால் சிவபெருமான் அசுரர்களையும் அழித்தார். அழித்தலுக்கென்ற வகையில் அக்கினிச் சுடரின் வடிவத்தில் சித்திரத்தேர் அமைகின்றது. மூன்று பகுதிகளில் கீழ் தளாங்களில் அஷ்டநாகங்கள், குதிரைகள், யானைகள், கந்தர்வர்கள் அமைகிறது. ஆலயத்தின் பூர்வீகத் தோற்றங்கள் பிள்ளை யார், முருகன், சிவன் இவற்றின் வடிவங்களும், பவளக்கால் மத்தியில் அழகிய ஆசனத்தில் ஷண்முகப்பெருமானார் வள்ளி நாயகி, தெய்வ நாயகி சமேதராராக வீற்றிருந்து தேர்ப் பவனியாக வருகின்ற வேளை அவ்வழகிய தேரில் உள்ள மணிகளின் ஓசை எம்பெருமானது திவ்விய திருநாமங்களை உச்சரிப்பது போல் ஒலிக்கின்றது.

முண்டக மலர்ந்ததென்ன மூவிரு முகமும் கண்ணும்
குண்டல நிரையும் செம்பொன் மவுலியும் கோல மார்பும்
எண்டரு கரமீராறும் இலங்கெழில் படைகள் யாவும்
தண்டையும் சிலம்பும் ஆர்க்கும் சரணமும் தெரியக் கண்டான்.

என்கின்ற வகையில் பள்ளம்புலப் பதிப் பெருமான் புதிய சித்திரத் தேரில் ஆரோகணித்து அடியார்கள் தம் வினைகள் களைய, அருள்பாலித்து வருகின்ற காட்சி நம் எல்லோரதும் உள்ளத்தைப் பரவசப்படுத்துகின்றது.

முருகன் எப்பொழுதும் இளமையும், அழகும் கொண்டவர். அதேபோல் இளமை வாய்ந்த ஒரு சிற்பாச்சாரியார் திரு.இராசதுரை பிரபாகரன் இச் சித்திரத் தேரினை மிகக் குறுகிய காலத்தில் பள்ளம்புலப் பெருமானுக்கு அமைத்துக் கொடுத்தார் என்றால் அது முருகப் பெருமானின் திரு வருளேயாகும். அவருடைய கரங்கள் என்றும் பல சித்திரப் பணிகளை செய்வதற்கு எம்பெரு மானது அனுக்கிரகமும் நீண்ட ஆயுளும் எனது நல்லாசிகளும் கிடைக்க வேண்டும். இத்திவ்விய பதியின் மக்கள் உள்நாடு அந்நிய நாடுகளிலிருந்து நிறைந்த நிதி உதவிகள் செய்தவர் களுக்கும், பெருவிழா உபயகாரர்களுக்கும், அறங்காவற் சபையினருக்கும், கிராம மக்களுக்கும், முருகப்பெருமான் சித்திரத்தேரில் பவனி வருகின்ற காட்சியை தரிசிக்கும் அடியார்களுக்கும், சகல செல்வங்களும் கைவரப் பெற்று நல்வாழ்வு பெறவும் எம்பெருமானின் பாதார விந்தங் களைப் பணிந்து நல்லாசிகள் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சுபம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

அத்தியடி
யாழ்ப்பாணம்

வேதாகமோத்தம ஆச்சார்ய சாரதா, சிவாகம கிரியாபானு,
சிவாச்சார்ய குருமணி
சிவஸ்ரீ.நா.யோகீஸ்வரக்குருக்கள்

வாழ்த்துரை

"சரவணத்தில் வந்தாய் நமதிரு பள்ளம்புலத்துவேலே"
"பள்ளம்புலத்தளிச் சரவணபவா"
"பள்ளம்புலக் குகனே"
"பள்ளம்புலத்தளி வாழ் பாலசுப்பிரமணிய"
"பள்ளம்புலத்தளி தெய்வமே"

பள்ளம்புலத்திலே எழுந்தருளி அருள்பாலிக்கும் முருகப்பெருமான் அற்புதங்கள் பல நிறைந்தவர் அடியார்கள் வேண்டுவனவற்றை வேண்டியாங்கு அருள்பவர் துன்பங்கள், துய ராங்கள் வராமல் தடுத்தாட்கொள்ளும் தன்மையர்.

பள்ளம்புலத்து முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயம் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்தது. பல முருக பக்தர்களின் பெருமுயற்சியினால் இன்று புதுப்பொலிவு பெற்று விளங்கு கின்றது.

அன்று எங்கள் ஆலயத்தில் கந்தபுராணக் கலாச்சார வளர்ச்சியினைக் கண்டோம். எங்கள் வாழ்வினை வளம்பெறச் செய்தோம். சிறப்புப் பூசைகள் விழாக்களைக் கண்டு பரவசம் அடைந் தோம் அலங்காரத் திருவிழாக்களைக் கண்ணுற்றோம். மெய்சிலிர்த்தோம் ஆன்மீக நிறைவு தனைப் பெற்றோம்.

இன்றோ மகோற்சவ விழாவில் பள்ளம்புலத்து முருகன் புதிய சித்திரத்தேரில் பவனி வந்து ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் அற்புதக் காட்சியினைக் காண்கின்றோம் பக்தி பரவசத்துடன் திருவருளில் மூழ்கி வலம் வருகின்றோம்.

முருகன் எழுந்தருளியுள்ள முழுமை பெற்ற ஆலயத்தினையும், புத்தம் புதிய தேரில் முருகன் வீற்றிருக்கும் அழகினையும் ஒருங்கே பார்த்து ஒப்பற்ற ஆன்மீக நிறைவினை அடியார்கள் பெறுவார்கள் என்பதில் ஐயமேதுமில்லை.

ஆண்டு ஒன்றினுள் சித்திரத் தேரினை வடிவமைத்து அதில் பள்ளம்புல முருகனை பவனி வரச் செய்துள்ளவர்கள் எமது ஆலய அறங்காவற் சபையினரும், அடியார்களுமேயாகும்.

வியக்கத்தக்க இச்சாதனையை நிறைவேற்றி முடிப்பதற்கு முன்னின்று முயற்சி செய்த செயற் குழுவினரையும், பொருளுதவிகள் புரிந்து ஊக்குவித்த உள்நாட்டு, வெளிநாட்டு முருகன் அருளாளர்களையும் வாழ்த்துகின்றோம்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப்பெறின்"

என்ற வள்ளுவர் வாய்மையினை நிலைநிறுத்திக் காட்டிருப்பவர்கள் எங்கள் அறங்காவற் சபையினரும், அடியார்களுமாகும். இந்த அரிய சாதனையை மிகக் குறுகிய காலத்துக்குள் நிறைவேற்றி வைத்துள்ளார்கள் என்றால் அதற்கு மூலம் முருகன் அருளேயாகும்.

ஆர்வத்தை, பக்தியை, கொடை உணர்வை, மனத்திட்பத்தை, விளைந்திட்பத்தை யெல்லாம் அடியவர்கள் உள்ளத்தில் உண்டாக்கி, இவ்வரலாற்றுச் சாதனை நிறைவேறுவதற்கு, உந்த சக்தியாக அமைந்தது முருகன் அருளேயாகும்.

எனவே

பள்ளம்புலத்து முருகனுக்கு, எங்கள் முதல்வணக்கம்
அறங்காவற் சபையினருக்கும், முருகன் அடியார்களுக்கும் எங்கள் வாழ்த்துக்கள்
அழகிய வனப்புமிக்க சித்திரத்தேரினை உருவாக்கி அதில் முருகன்
பவனி வரும் இன்றைய நாளில் வெளியாகும்
தேர்மலருக்கும் எமது வாழ்த்துகள்

ஓராறு திருமுகங்கள்
ஒளிவீசும் காட்சிதனை,
தேரோடும் வேளைதனில்
ஒளியா விழிகளினால்
சீராகப்பார்த்து நின்றால் – இறைவா
பகலிரவு தெரியுமோதான்!!!
ஓம் முருகா

திரு.ச.மகாலிங்கம்
இளைப்பாறிய ஆசிரியர்

சித்திரத்தேர் மலர் வெளியீட்டு வாழ்த்துச் செய்தி

சரவணை பள்ளம் புலம் எனும் திருத்தலத்திலே அருள் பாலித்துவரும் முருகப் பெருமானுக்கு புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆலயம் என்பது எங்கும் வியாபகராய் மறைந்திருக்கும் இறைவன் தன்னை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு சாந்நித்தியராய் எழுந்தருளி இருக்கும் இடமென ஆறுமுகநாவலர் கூறிச்சென்றிருக்கிறார். அத்தகு இறைவனது திருவடியில் ஆன்மா லயித்து அல்லது ஒன்றித்து இருத்தல் அல்லது ஆணவம் அடங்குவதற்குரிய இடமென பொருள் கொள்ளப்பட்டு வருகின்றது. இத்தகு ஆலயங்களில் நித்தியம், நித்தியாங்கம், நைமித்தியம், நைமித்தியாங்கம், காமிகம், காமிகாங்கம் எனும் ஆறு உறுப்புக்களாலும் நடாத்தப்படும் நைமிகத்துள் ஒன்றுதான் மகோற்சவம் ஆகும்.

சைவ மக்கள் வாழும் தேரார் வீதியில் தேவர் குழாம் நிறையும் தன்மைகளைப் பாடியும், துஷ்டர்களை விலக்கியும் தூயோராய் வாழ வழிகாட்டும் பெரு அற்புத விழாவே இத் தேர் திருவிழாவாகும். இந்நிலையில் இத்தேர் ஓட ஆரம்பித்தால் எத்தனை எத்தனை சறுக்கு கட்டையில் அகப்பட்டு, அகப்பட்டு இறுதியில் இருப்பிடம் சேர்வது போல் நாமும் இப் பூமியில் வாழ ஆரம்பித்த நாள் முதல் இடரும் நன்மையும் சூழ்ந்து வந்து இறுதியில் அவன் திருத்தாழ் சேர்வோம் என்பதை "அவனருளாலே அவன் தாழ் வணங்கி" என்பதற்கு அமைய முருகப் பெருமானை சித்திரத்தேரான அச் சிங்காரத்தேரில் வள்ளி தெய்வயானை சமேதராய் வலம்வந்து எல்லோர்க்கும் வாழ்வு கொடுத்து வினையாவும் போக்கி இவ்வையத்தில் பெரும்பேறு பெற்று வாழ எம் பெருமானை வேண்டுகின்றேன்.

அத்துடன், இத் தேர்த்திருப்பணியில் பங்கு கொண்ட அனைத்து அடியார்களுக்கும் முருகப்பெருமானின் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

நந்தகோபாலன்
பிரதேச செயலர்,
வேலணை.

சித்திரத்தேர் கலைஞானி சிற்பாச்சாரியார் உள்ளத்திலிருந்து வாழ்த்துச் செய்தி

எல்லாம் வல்ல முருகப் பெருமானின் திருவருளைத் துணையாயாகக் கொண்டு சரவணை பள்ளம்புலம் முருகப் பெருமானுக்கு ஒரு சித்திரத்தேர் செய்வதற்கு எம்பெருமான் எனக்கும் எனது உறவினர் களாகிய எனது குழுவினருக்கும் தந்த பேற்றினை எண்ணி மகிழ்வடைந்து கொண்டு சித்திரத்தேர் எம்மால் இயன்றளவு குறையேதும் இல்லாது வடிவமைத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சித்திரத்தேர் நிர்மாணிப்பதற்கு பெரும் பணம், பொருள் உதவியோர்க்கும் இப்பணியை நிறைவேற்றுவதற்குக் களைப்படையாது என்னை எப்போதும் இடைவிடாது ஊக்குவித்துக் கொண்டே இருக்கும். இவ்வாலயத்தின் அறங்காவலர் சபையினருக்கும், என்னுடைய குழுவின ராகிய உறவினர்களுக்கும் மற்றும் இரும்பு வேலை செய்தவர்க்கும், வர்ணவேலை செய்தவர்கள் மற்றும் பல்வேறு வழிகளில் உதவிய தொண்டர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு சகலரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ எம்பெருமானின் திருவருளை வேண்டி வாழ்த்தி அமர்கின்றேன்.

விஸ்வப் பிரம்மஸ்ரீ
இராஜதுரை பிரபாகரன்
"ராஜன் சிற்பாலயம்" தலங்காவல்
பிள்ளையார் வீதி திருநெல்வேலி (மேற்கு)

சித்திரத்தேர்த் திருப்பணியில் ஈடுபட்ட சிற்பக்கலைஞர்கள்.

சித்திரத்தேர் அச்சுப்பாரேற்று வைபவத்தின்போது கலந்துகொண்ட
சிற்பக்கலைஞர்களும் முருகன் அடியவர்களும்.

அறங்காவற் சபையினரிடமிருந்து ...

அறங்காவற்சபை

எமது ஆலயம் ஓர் வரலாற்றுப் புகழ் மிக்க தொன்மையான ஆலயங்களுள் ஒன்றாகும். இது ஏறக்குறைய 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்டது. இது "அம்மையப்பா" எனும் அடியாரினால் வேல் வைத்துப் பூசிக்கப்பட்ட கொட்டிலில் ஆரம்பிக்கப் பட்டது.

இவ்வாலயம் மனதிற்கு இனிய மருத மரநிழல் சூழவும் செந்நெல் விளையும் வயல் கள் சூழவும் அமைந்திருப்பது ஓர் விசேட அம்சமாகும். எமது கிராமம் அன்று முதல் இன்று வரை ஏனைய கிராமத்தவர்கள் போல் பண வசதி படைத்தவர்களைக் கொண்டிராத கிராமமாகும். ஆனால் காலத்திற்கு காலம் பல பெரியார்களும், அன்பர்களும், இளைஞர் களும் உள்ளத் தூய்மையோடும், பயபக்தியோடும், நேர்மையோடும் நிர்வாகம் நடாத்தி வந்ததால் குறுகிய காலத்தில் விரைவான வளர்ச்சியைப் பெற்று வந்தது. இவ்வன்பர்கள் எல்லோரினதும் அப்பழுக்கற்ற தொண்டினால் கொட்டிலாக இருந்த கோயில் வெட்டுக் கல் சிற்பங்களுடன் கூடிய மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், வெளிமண்டபம், யாகசாலை, பிள்ளையார் கோவில், வரைவர் கோயில், மணிக்கூட்டுக் கோபுரம், பூசகர் இல்லம், பூந்தோட்டம் போன்ற பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்ட ஒரு கோயிலாக மிளிர்கின்றது. அத்துடன் எம்மூரில் வாழ்ந்த பண்டிதர்கள், கல்வியியலாளர்கள், புலவர்கள் போன்றோரினால் முருகப் பெருமானுக்கு திருவூஞ்சல், திரவிரட்டை மணிமாலை, வாழிமங்கலம், பல பக்திப் பாடல் தொகுப்புகள் போன்றவற்றுடன் ஆலயத்திற்கென ஒருயாப்பும் ஆக்கி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கோயிலிற்குரிய நன்கொடைக் காணிகளிலிருந்து பெற்ற வருமானத்தைக் கொண்டு நித்திய பூசையும் குறைவின்றி நடைபெற்று வந்தது. 1990ம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன் மூன்று காலப் பூசையுடன், பெருந்திருவிழா, திருவெம்பாவை, சிவராத்திரி விழா, லட்சார்ச்சனை,

கந்தசஷ்டி விழா, நவராத்திரி விழா, கார்த்திகை உற்சவம், புதுவருடப்பிறப்பு போன்ற விழாக்கள் வெகுசிறப்பாக நடைபெற்று வந்தது. திருவெம்பாவையின் போது பல குழுக்கள் அதிகாலை வேளை கிராமம் முழுவதும் சென்று திருவெம்பாவை படித்து வந்து பின் ஆலயத்தில் கூடி வெகுசிறப்பாக திருவெம்பாவை விழாவை திருவெம்பாவைப் பாடலில் மனனப்போட்டிகள், கருத்துப் போட்டிகள் வைத்து பரிசில்கள் கொடுத்து முடித்து வைப்பது எமது ஆலயத்தில் இருந்த சிறப்பம்சமாகும். அத்தோடு விழாக்காலங்களிலும் வெள்ளிக் கிழமை தோறும் சிறுவர்கள், இளைஞர்கள் கூடி கூட்டுப்பிரார்த்தனை நடாத்துவதோடு செயற்திறன் மிக்க கூட்டுப் பிரார்த்தனைச் சபையொன்றும் நிறுவப்பட்டிருந்தது. அத்தோடு நிரந்தரமான பூசகர் நிதியத்தையும் ஆரம்பித்து இருந்தனர். இதை நாமும் இயன்றவரை பெருக்கிக் கொண்டே வருகிறோம்.

இவை எல்லாவற்றுக்கும் தூயமனதுடன் உழைத்த அத்தனை பேரினதும் குடும்பங் களும், பிள்ளைகளும் பரப்பரையினரும் முருகனின் அருட்கடாட்சம் பெற்று உள்நாட்டி லும், வெளிநாடுகளிலும் கல்வி, செல்வம் போன்றவற்றில் சிறந்து விளங்குகின்றனர். எமது ஆலயத்தில் ஏறத்தாள 40 வருடங்களாக நித்தியபூசை, விசேட விழாக்களை பற்று டன் புரிந்து வரும் சிவஶ்ரீ.நா.யோகீஸ்வரக் குருக்களையும் அவர்களின் பிள்ளைகளை யும் நாம் நன்றியுடன் நினைவு கூரக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மீண்டும் 1996இல் தாயகம் திரும்பிய முருகன் அடியார்களும் புதிதாக அமைக்கப் பட்ட அறங்காவற் சபையினருமாக முருகனின் திருப்பதியை செப்பனிட்டதோடல்லாமல் கும்பாபிசேகம் செய்வித்ததோடு தொடர்ந்து நிறைவுபெறாமல் இருந்த திருப்பணி வேலை களான உள்வீதி சுற்றுக் கொட்டகை வேலை, நிலக்காறை வேலை, தெற்குப் புற ஆறுமுக சுவாமி வாயிற் கொட்டகை வேலை, பூந்தொட்ட அமைப்பு, வெளிக்கொட்டகை புனரமைப் புடன் அக்கொட்டகைக்கான அரணாக இரும்புவேலி அமைப்பு, வடக்குப்புற வீதி உயர்த்தி யமை என்பவற்றுடன் குருக்கள் வீடு, முற்றாக திருத்தி உயர்த்தப்பட்டு புணருத்தாரணம் செய்ததோடு இன்றுவரை வருடந்தோறும் பொதுக்கூட்டம் போன்றவற்றை நடாத்தியும் வந்துள்ளது. சென்றவருடப் பெருவிழா முடிந்தபின் நாம் அடுத்தவருடம் எப்படியாவது ஓர் சித்திரத் தேரினை அமைக்க வேண்டும் என முடிவு செய்தோம். அப்போது எம்மிடம் எந்த வித நிதி இருப்பும் இருக்கவில்லை. எனினும் ஏறத்தாள 10 மாதங்களுக்குள் வெளியூர் அன்பர்களினதும் உள்ளூர் அன்பர்களினதும் உதவியுடன் ஓர் சித்திர தேரினையும் அதற்கான் அமைவிடத்தையும் நிறைவேற்றி முடித்தது முருகனின் அற்புதங்களில் ஒன்று தான் என்று கூற வேண்டுமேயொழிய எம்கைகளில் எதுவும் இல்லை. அத்தோடு இதற்

கான சித்திரத்தேர் வெள்ளோட்ட மலர் ஒன்றினையும் வெளியிட விரும்பியமையினால் அதனையும் முருகனின் அருளாசியுடன் வெளியிட்டு வைக்கின்றோம்.

இவையாவற்றையும் செவ்வனே நிறைவேற்ற நிதியுதவியளித்த வெளிநாடுகளில் வதியும் எமது கிராம அன்பர்களுக்கும் மற்றும் உள்நாட்டில் வசிக்கும் அன்பர்களுக்கும் முருகனின் அருளாசி கிடைக்கும் என உறுதியுடன் கூறி ஒத்துழைத்த எல்லோருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறி எமது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

ஆலய அறங்காவற் சபையினர்

தலைவர்	-	திரு.ப.ஆரூரன்
உபதலைவர்	-	திரு.ந.சசிதரன்
செயலாளர்	-	திரு.தி.ஸ்ரீகந்தராசா
உபசெயலாளர்	-	திரு.பா.முகிலன்
பொருளாளர்	-	திரு.த.அருணகிரிநாதன்
சொத்துடமை அதிகாரி	-	திரு.கா.விவேகானந்தன்
ஆலய பரிபாலகர்	-	திரு.ச.கைலாசபதி

செயற்குழு உறுப்பினர்கள்

திரு.சு.மகேந்திரன்
திரு.சொ.சிவயோகலிங்கம்
திரு.ப.ஞானபண்டிதன்
திரு.ம.யோகராசா
திரு.நா.வரதராசா
திரு.கு.பேரின்பநாதன்
திரு.செ.ஜெயகாந்தன்
திரு.வ.நாவேந்தன்

க/கு ஆய்வாளர்

செல்வி.இ.கலைச்செல்வி

காப்பாளர்

திரு.நா.மகாலிங்கம்

உதித்தனன் உலகம் உய்ய

ச.கு.சிவானந்தன்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
(முன்னாள் தலைவர்)

உலகம் உய்ய உதித்த எம்பெருமான் முருகன் எழுந்தருளியிருக்கும் பதிகளில் ஒன்றாம் சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருக மூர்த்தி திருக்கோயிலில் இவ்வாண்டு மகோற்சவத் தேர்த்திருவிழாவிற்கு முருகப் பெருமான் புதிய சித்திரத் தேரினில் பவனி வந்து முருகன் அடியவர்க்கு அருள் பாலிக்க உள்ளார் என்பதை அறிந்து அளவிலாப் பேருவகை அடைந்துள்ளோம்.

கலியுக வரதனாம் கந்தப் பெருமானின் பெருமையை சிவபிரானே உமாதேவி யாருக்குப் பின்வருமாறு கூறியுள்ளார்.

"நன்முகம் இருமூன் றுண்டால் நமக்கவை தாமே கந்தன்
தன்முக மளவி யுற்ற தாரகப் பிரம மாகி
முன்மொழி கின்ற நந்தம் மூவிரண் டெழுத்தும் ஒன்றாம்
உன்மகன் நாமத் தோரா றெழுத்தென உற்ற அன்றே"

"ஆதலின் நமது சக்தி அறுமுகன் யாமும்
பேதம் அன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க்கு அருள் வல்லான்"

தேவி! "நமக்கு ஆறுதிருமுகங்கள் உண்டு அதாவது ஐந்தொழிலிற்கு அதிபனாக ஐந்து முகமுடைய சதாசிவனாக யாம் இருக்கிறோம் நீ பலவாறாக இருப்பினும் ஒரு முகமுடைய பரமேசுவரி குமரன் உனது ஸ்வரூபத்தையும் எனது ஸ்வரூபத்தையும் ஒருங்கே கொண்டு அறுமுகன் எனப்படுகின்றான். ஓம் என்ற குடிலையுடன் ஆறெழுத்து மந்திரம் உன் முகனுடைய சடாச்சர மந்திரமாகியது. (ஓம் சரவணபவ) அவனுக்கும்

நமக்கும் வேற்றுமை இல்லை. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அவன் பாலனாகத் தோன்றினும் யாவற்றையும் உணர்ந்தவன். தன்னை அன்போடு வழிபடுபவர்கள் செல்வத்தையும் ஞானத்தையும் முக்தியையும் கொடுக்க வல்லவன்" என குமரன் பெருமையை கூறுகிறார் சிவபெருமான்.

இகத்திலும் எமக்கு நல்வாழ்வு அளித்து பரத்தில் வீடுபேற்றை தர வல்லவராகிய முருகனின் திருக்காட்சியைக் காண்போர் உய்வடைந்து விடுவார்கள் நாம் உய்வடைவதற்கு மூலமாகத் தேவைப்படுவது ஆணவம், கன்மம், மாயை என்றமும் மலங்களில் இருந்து எம்மை விடுவிப்பதே ஆகும். முருகனின் தரிசனம் எமக்கு கிடைத்தால் இது எமக்குக் கைகூடும். கந்தபுராணத்தின் சாரமே இது தான் சூரன், சிங்கமுகன், தாரகன் முறையே ஆணவம், கன்மம், மாயை ஆவார்கள்.

"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலை தொல்கதி யடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாள் பெற்றுய்ந்தான்"

அகத்தில் ஆணவமலச் சேறு உடையோர் கந்தவேள் கழல் பணிந்தால் மேன்மை யடைவர். தீமைகள் செய்த சூரனை ஆட்கொண்டு அருளியமை ஒன்றே தக்க சான்றாகும்.

தேர்த்திருவிழா திரிபுர தகனத்தைக் குறிப்பதாகும். திரிபுர தகனம் என்பது இறைவனருளால் மும்மலத்தையும் நீக்குவதே ஆகும். ஆவணம் வலுவிலக்க எமக்குத் திருவருள் கைகூடும். முருகப் பெருமானின் தரிசனமும் அவன் நாமமும் எமக்கு ஆண வத்தின் வலுவை இழப்பதற்கு உறுதுணையாக இருக்கும்.

தேர்த்திருவிழாவில் அடியவர்கள் யாவரும் எம்பெருமானின் பேரருளைப் பெற்று பேரின்பம் அடைய ஆறுமுகனின் பாதகமலங்களை வேண்டி வணங்குகின்றோம்.

தேர்த்திருப்பணியை நிறைவேற்றிய அறங்காவற் சபையினர், முருகனடியவர்கள், சித்திரத்தேரை அழகுற நிர்மானித்த ஸ்தபதி மற்றும் அனைவர்க்கும் வள்ளி தெய்வானை சமேத சுப்ரமணிய ஸ்வாமி வள்ளலாய் இருந்து வேண்டுவதை வாரி வழங்க வாழ்த்தி எம்பெருமானை பிரார்த்தித்து வணங்குகிறோம்.

தற்போது வெளிநாடுகளில் வசித்து வரும் நாம் யுத்த மேகம் எம் நாட்டைச் சூழ்ந்த போது பள்ளம்புலத்து முருகன் எம்மவர்களின் உயிர்காத்த சம்பவங்களை இன்னும் எண்ணிப் பார்த்து அவனின் அருள் முகத்தையும், திருத்தலத்தையும் மானசீகமாக வழிபட்டு வருகின்றோம். அதே வகையில் அழகான முருகன் சித்திரத்தேரினில் அருள் பாலிக்கும் அந்தக் கண்கொள்ளாக் காட்சியை எம் மனக் கண்ணால் வணங்கி எமது தாய்த் திருநாட்டில் அமைதி சூழ்ந்திருக்க தமிழ்க் கடவுள் குமரவேளின் அருளையும் அழகையும் கண்ணாரக் கண்டு மகிழும் அந்த திருநாளை வெகு விரைவில் அளித்து அருளிட வேண்டும் என வேண்டி அவனது திருவடிகளை வணங்குகின்றோம்.

"அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்ட
ஒருதிரு முருகன் வந்தாங்(கு) உதித்தன் உலகம் உய்ய"

பாலனே குமரவேளே பள்ளம்புலமுறை முருகமூர்த்தி
ஓலமே இட்டுக்கூவி ஓங்கியே சிரமேற்கையாய்
சீலனே கருணைக்கந்தா சின்னவா இளைய மைந்தா
பாலமே இல்லாவாழ்வு பட்டுநாம் உழல்தல்கண்டும்
ஏனடா இரங்காநின்றாய் எம்மவா திருத்தேர் தந்தோம்
ஞாலமே வியக்கநீயும் நசிவுற எமதாம் துன்பம்
ஏறடா மகிழநாங்கள் ஏற்றுநாம் வீடந்தா பற்ற
வேலனே வினைகள்தீய வீற்றிருந் தாடவாடா.

சிறுதேர் உருட்டியருளே!

கலாபூஷணம் அருள்மொழி
அரசி ஸ்ரீதரன்
திருமதி.ஜசிந்தா ஜெயந்தியகாதன்

யாழ்ப்பாணம் சரவணை, பள்ளம்புலம் வாழ் சைவ மக்கள் அழியாத பக்தியும், அய ராத மனமும் கொண்ட உறைப்பு மிக்கவர்கள். எடுத்த காரியத்தை இனிது முடிக்கும் மனவலி உடையவர்கள். பள்ளம்புலத்திலே எழுந்தருளி அருள்பாலிக்கும் முருகப் பெருமானுக்கு அழகிய வனப்பு மிக்க சித்திரத் தேரினை உருவாக்கும் திருப்பணியில் ஈடுபட்டு அதற்காக தேர்மலர் ஒன்றினை ஆக்கும் பெரும்பணியில் ஆர்வம் கொண்டு உழைத்து வருகின்றனர்.

இறைவனுக்குச் செய்யும் உபசாரங்கள் இருவகைப்படும். அவை தேவாபசாரம் இரா ஜோபசாரம் எனப்படும். இறைவனை தெய்வமாகப் பார்ப்பது ஒன்று. மற்றையது அவனை இராஜானாகக் கண்டு அரசன் உலாவரும் தேரில் எழுந்தருளச் செய்து விழா எடுப்பது.

தேரைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்கள் ஆகம, உபநிடத நூல்களில் காணப் படுகின்றன. கடோபநிஷதம் மனித உடலையே தேராக வர்ணிக்கின்றது. "தேர்" என்னும் சொல் பெயர்ச்சொல்லாகுமிடத்து இரதத்தையும், வினைச்சொல்லாகுமிடத்து ஆராய்தல், தெளிதல், சிந்தித்தல் தெரிந்தெடுத்தல் என்று பல பொருட்களை அளிப்பது சிந்தனைக் குரியதாகும். பிள்ளைத் தமிழில், ஆன்மகற்குரிய பத்து பருவங்களில் சிறு தேரும் ஒரு பருவம் கானல்நீர் "பேயத் தேர்" என்ற வழங்கப்படுகின்றது.

ஒவ்வொரு தெய்வத்திற்கும் சிறப்பான இர தங்கள் (தேர்) உண்டு. பிரம்மாவிற்குரியது வைராஜம், குபேரனிற்குரியது புஷ்பகம், சிவபெருமானுக்குரியது கைலாசம், வருணனுக் குரியது மானிகம், இந்திரனுக்குரியது திரிவிஷ்டபம், இரதபாணியிலேயே அமைந்த கோயில் கரக் கோயிலாகும். தேர் வடிவமாக சக்கரங்களோடு இவ்வாலயத்தை அமைப்பர்.

தென்கடம்பூரில் அமைந்த கோயில் திருக்கரக்கோயில் என அப்பர் பெருமான் குறிப்பிடு கின்றார்.

"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே" (ஐந்தாந் திருமுறை)

திருக்கோயில்களின் அமைப்பை ஒட்டியே தேரின் வடிவமும், திட்டமிடப்படுகின்றது. சதுர வடிவமான தேர் "நாகரம்" என்றும், எண் கோண வடிவமான தேர் "திராவிடம்" என்றும், வட்ட வடிவமான தேர் "வேஸரம்" என்றும், அறுகோண வடிவமான தேர் "அந்திரம்" என்றும் சிற்ப நூல்கள் கூறுகின்றன.

தேர்கள் பெரும்பாலும் மரத்தாலேயே செய்யப்படுகின்றன. நாவல், புளி, மகிழ், மருது, இலுப்பை, கருங்காலி, வன்னி முதலிய மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. திருவாரூரில் மனுநீதிச் சோழன் உபயோகப்படுத்திய தேர் தற்பொழுது கற்றேராகக் காணப்படுகின்றது. திருவாரூர் தியாகராசப் பெருமான் எழுந்தருளும் தேர் "ஆழித்தேர்" எனப்படும். உலகிலேயே மிகப்பெரிய தேர் இது. இத்தேர் நிலையிலிருந்து புறப்பட்டு விட்டால் மீண்டும் நிலையை அடைய பலநாட்கள் ஆகும். சில நேரங்களில் மாதக் கணக்கும் ஆகும் என்று கூறுவர். ஆனால் தற்பொழுது நவீன பொறிகளின் உதவியால் தேரை நிலைக்குக் கொண்டு வருகின்றனர். "திருவாரூர் தேர் அழகு" "திரு இடைமருதூர் தெரு அழகு" என்று குறிப்பிடுவார்கள். தேரோடும் வீதிகள் அகன்று பரந்து அழகு மிக்கதாய்க் காணப்படும் ஸ்ரீவல்லிபுத்தூர் தேரையும் சிறப்பாகக் கூறுவர்.

தேரின் பல்வேறு உறுப்புக்களை திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி போன்ற நிகண்டுகள் குறிக்கின்றன. அச்சு, அடித்தளம், ஆரக்கால், கிடுகு, குடம், கூம்பு, கொடி, கொடிஞ்சி, கொடுங்கை, தேர்ச்சீலை, நாப்பண், பிரம்பு, தேர்முட்டி என்பன முக்கிய உறுப்புக்களாகும். தேரடிச் சம்பா வனை, தேர்க்காசு, முட்டுக்கட்டை, வடம் பிடித்தல், புதுத் தேர் வெள்ளோட்டம் போன்ற சொற்களும் தேரை ஒட்டி எழுந்ததே.

முதன் முதலாகத் திரிபுரங்களையும் எரிக்க சிவபெருமான் ஏறிய தேரின் சிறப்பு திருவிரிஞ்சை முருகன் தமிழில் மார்க்க சகாயத்தேவர் கூறுவார்.

"வண்டி இரு சுடராக வையகந் தேராக
மாவாக நாலுமறையும்
வானவர்க ளனைவரும் பரிவாரமாக மலர்
வாழ்பவன் பாகனாகக்
கொண்டு மலை சிலையாக அரவநா ணாகமால்
கோலாக அழலாக வாய்
கோளிறகு காலாக வெந்துமுப் பூரமெரிகொ
ளுந்தவெய் தவர் குமரனே"

கமலாக்ஷன், தாரகாக்ஷன், வித்யுன்மாலி என்றும் முப்புர அசுரர்களை அழிக்க சிவ பெருமான் எழுந்தருளி தேவர்கள் தேரை அலங்கரித்தனர்.

மந்தரகேசரி மலைகள் அச்சாகவும், சூரிய சந்திதர்கள், சக்கரரங்களாகவும், இரு துக்கல்சந்திகளாகவும், பதினான்கு உலகங்கள் பதினான்கு தட்டுகளாகவும், உதய அஸ்தகிரிகள் கொடிஞ்சியாகவும், நதிகளும், நாகங்களும் கொடிகளாகவும், உடுக்கள் விதானமாகவும், மோட்ச உலகம் மேல் விரிவாகவும், யாகங்கள் சட்ட விதானமா கவும் நாள் முதலியன எண்ணையூற்றும் இடுக்கு மரமாகவும், எட்டு மலைகளும் தூண்களாகவும், ஏழு கடல்களும் தேர்ச் சிலைகளாகவும், அங்கங்களாகக் கொண்டு பெரிய பேதரை அலங் கரித்துப் பெருமான் திருமுன் கொண்டு வந்து நிறுத்தினர்.

தேர் வீரர்களை அதிததன், மகாரதன், சமரதன் அர்த்தரதன் என்ற முறையிலே முற்காலத் தேர் வீரர்களைத் தரம் பிரிப்பர். இரப் போர்க்குத் தேரையே பரிசாகக் கொடுக் கும் வள்ளல் பெருமக்கள் அக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். இதனைத் "தேர் வண்மை" எனப் புகழ்ந்தனர்.

இத்தகைய சிறப்புக்களுக்கு நிலைக்களமான சித்திரத் தேரில் சரவணை – பள்ளம்புலம் அழகன் தேர் ஏறி வந்து திருவருள் பாலிக்க இருக்கின்றான். அடியார்கள் அனைவரும் திருமுருகமூர்த்தியின் தேரின் வடம் தொட்டிழுத்து முத்தி உலகில் இடம் பெறுவதற்கு "சேரவாரும் செகத்தீரே" என்று அழைக்கின்றோம்.

திருமுருகமூர்த்தியின் தேர் உருள, உருள நாம் செய்த பாவங்கள் ஓடும் பழ வினைகள் ஓடும், மனமாயை ஓடும் இவை மட்டுமா... திருமலை முருகன் பிள்ளைத் தமிழை மனத்திரையில் ஓடவிடுங்கள் உண்மை விளங்கும்.

பாரோடு பதினாறு லோகத்தில் உள்ளவெம்
பழியோடு பாவம் ஓடப்
பஞ்சம் ஓடக்கொடுமை யஞ்சிஓடத்தமிழ்ப்
பாவலர்கள் வறுமை ஓடச்

சூர்ஓட அவுணர்கள் பயந்தோட வானவர்கள்
துன்பங் கலங்கி யோடச்
சொல்லொடு பழகாத புலவரோ டப்பழைய
தொண்டர்மன மாயைஓட
வாரொடு கொங்கைமட வாரோடு மிளைஞர்தம்
மனையோடு மேவிவாழ
வந்துதெரி சிந்துவோர் பிணிஓட அங்கவர்
மனத்துயர் அனைத்தும் ஓடத்
தேரோடி வரும்வீதி திகழ்பண்பை வாழவே
சிறுதேர் உருட்டியருளே!
சிவஞான முத்திதரு திருமா மலைக்கடவுள்
சிறுதேர் உரட்டியருளே!

சித்திரத் தேரூரும் செல்வ முருக மூர்த்தி வாழி!
பள்ளம்புலத்துயர் சைவப்பெருமக்கள் வாழி!!

தேர் ஊர உளர் ஏறும்!

கம்பூஷாரிதி இ.ஜெயராஜ்

உயர்ந்த நம் சைவசமயம் காலவரையறைகள் அற்றது
ஆன்மாக்களை இறைநோக்கி நகர்த்துவதில் முதன்மைக் தகுதி கொண்டது
மற்றைய சமயங்கள்போல் உயர்தார்க்கு மட்டும் அல்லாது
எல்லாத் தரத்தினர்க்கும் இறையை அடைதற்காம் வழிகாட்டி நிற்பது
தொழுவார்தம் ஆத்மநிலைகளுக்கேற்ப உருவ வழிபாட்டை விரிந்துரைப்பது
இறையை அடைதற்காம் நாற்பாதங்களை,
சரியை, கிரியை, யோகம், ஞானம் என வகுத்துத் தந்துவியது
இத்தகு பெருமைகள் கொண்ட நம் சைவசமயத்தின்,
வழிபாட்டு நெறிக்காம் களமாய் அமைவதே,
நம் சைவ ஆலயங்களாம்.

ஆன்மாவை இலயிக்கச் செய்வதால்,
நம் இறைத் திருக்கோயில்கள் ஆலயங்கள் எனப்பட்டன.
இவ்வுயர் நோக்கத்தை நிறைவேற்றும் வண்ணம் நம் இந்துமதத்தில்,
ஆலய வடிவமைப்பு, பூஜை முறைகள், இறைத் திருக்கோலங்கள்,
உற்சவங்கள் என்பவை அமைக்கப்பட்டுள்ளன.
இவற்றுள் நைமித்திய பூஜையாய் உரைக்கப்படும் உற்சவங்கள்,
அனைத்து மக்களினதும் ஆன்ம ஈடேற்றம் நோக்கிச் செய்யப்படுவன.
இவ்வுற்சவங்கள் இறைவன் இயற்றும் ஐந்தொழில்களான,
படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றை,
குறிப்பால் உணர்த்தி நிற்பன.
இவ்வுற்சவங்களில் தலையாயதாய்க் கருதப்படுவது இரதோற்சவம் ஆகும்.
தேர்த்திருவிழா என அனைவரும் போற்றுகின்ற இவ்வுற்சவம்,
இறைவனின் அழித்தல் தொழிலைக் குறிப்பது.
ஆன்மாக்களைப் பற்றியுள்ள ஆணவத்தை அழித்து,
அவற்றை உய்விக்கும் பொருட்டு,
இறைவன் தேரேறி அழிவுத்தொழில் இயற்ற வருகிறான் என்பதே,

இரதோற்சவத்தின் உட்பொருளாம்.
மலநீக்கத்திற்காய்ப் பாடுபடும் ஆன்மாக்களுக்கு,
இவ்வுற்சவம் மிகவும் முக்கியமானது.
இவ்வுற்சவத்தை நிகழ்த்துவிப்போர், துணைசெய்வோர், தொழுவோர் என்பாக்கு,
இறையருள் கைகூடுதல் திண்ணமாம்.

தமிழர்கள் சிவசொரூபனான முருகனைத் தம் கடவுளாய்க் கொண்டனர்.
முருகு என்னும் சொல்லுக்கு அழகு என்பது பொருள்.
இறைவருள் அழகனான முருகனையும்
நிலங்களுள் அழகானதாகிய குறிஞ்சியையும்,
தமதாக்கிக் கொண்ட தமிழர்தம் கலையுணர்வு வியக்கத்தக்கது.
பலவாய், ஒன்றாய்த் திகழும் முருகப்பெருமானும் ஐந்தொழில் இயற்றுகிறான்.
"கறுவுகொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே" என
திருமுருகாற்றுப்படை, முருகன் அழிவுத்தொழில் செய்வதை குறிக்கும்
நல்லோரைக் காத்து அல்லோரை அழிக்க,
அன்று தேரேறிய முருகனை இன்றும் தேரேற்றுவது பெரும்பணியாம்.

இலங்கையின் சிரம் எனப் போற்றப்படுவது யாழ்ப்பாணம்
அம்மண்ணின் அறிவு நோக்கியே இப்புகழ் அதற்குக் கிட்டிற்றாம்
அவ்வுயர் புகழ் கொண்ட மண்ணில்,
சமய ஆசாரங்களைப் போற்றுவதில் முன்னிற்பது,
தீவகத் திருமண்.
அத்தீவக பள்ளம்புலத்தில் கோயில் கொண்டு முருகப்பெருமான்
பற்பல நூற்றாண்டின் மேலாக அருள்பாலித்து நிற்கிறான்.
நூறாண்டுகளாய்த் தம் குலம் காக்கும் முருகப்பெருமானை,
இதரமேற்றிக் காண ஊர்மக்கள் விரும்பினர்.
அவர்தம் பக்தி, ஆர்வமாய், கொடையாய் விரிய,
மிகக் குறுகிய காலத்தில் தேர்த் திருப்பணி நிறைவுற்றிருக்கிறது
எண்ணிய முடிதல் இறையருளால் அன்றி நிகழுமோ?
திருப்பணியில் திருவருள் பாலித்தமை திண்ணமாகிறது
இவ் அருட்பணியில் இணைந்த அனைவரும் பாக்கியவான்களாம்
அவ்வனைவர்தம் குலத்தையும் முருகவேள் காப்பான்
தேரில் நம் திருமுருகன் ஏறத் தீரா வினையெல்லாம் தீரும்.
உலகம் உய்யும்
இந் நற்பணியில் இணைந்தார்க்கு எனது வாழ்த்துக்கள்!
"இன்பமே எந்நாளுந் துன்பமில்லை"

தேர்த்திருவிழா

கைலைப்புலவர்
மு.திருஞானசம்பந்தபிள்ளை

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் பலவகைத் தத்துவநுட்பங்களை உள்ளுறையாகக் கொண்டவை. சிவாலயங்களில் நடைபெறுந் தேர்த்திருவிழா சிவபெருமான் திரிபுர தகனம் செய்தருளிய நிகழ்ச்சியைப் புலப்படுத்துவது

அப்பணி செஞ்சடையாதிபுராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மலகாரியம்
அப்புரம் எய்தமை யாரறிவாரே

எனத் திருமூலர் தாம் அருளிச் செய்த திருமந்திரத்தில் சிவபிரான் திரிபுர தகனஞ் செய்த வரலாற்றின் தத்துவ நுட்பத்தை விளக்கியிருப்பதைக் காணலாம்.

இவ்வாறேயன்றி வேறுவகையிலும் தேர்த்திருவிழாவின் தத்துவத்தைப் பெரியோர்கள் விளக்கியுள்ளனர்.

பொதுவாக எம்மனோரால் உயிர்கள் எனப் படும் ஆன்மாக்களுக்கு காரண சரீரம், கஞ்சுக சரீரம், குணசரீரம், சூக்கும சரீரம், தூல சரீரம் என்னும் ஐந்து சரீரங்கள் – உறைகள் – சட்டைகள் உண்டு.

இவற்றை முறையே ஆனந்தமயகோசம், விஞ்ஞான மயகோசம், மனோமயகோசம், பிராண மய கோசம், அன்னமயகோசம் என்றும் அழைப்பர். கோசம் என்பதற்கு உறை அல்லது சட்டை எனப்பொருள் கூறலாம்.

ஆன்மாவானது இந்த ஐந்து கோசங்களின் வேறாயும், அவற்றோடு சேர்ந்து அதுவதுவாகவும் நின்று அவற்றைச் செலுத்தும்.

இவை ஐந்தும் மாயையினின்று ஒன்றுக் கொன்று முறையே தூலமாய்த் தோன்றும்.

ஆனந்தமய விஞ்ஞானமய கோசங்கள் மிகவும் மென்மையானவை ஆதலின் அவைகள் தோற்பாவையைப் போன்றன. மனோமய பிராண மய கோசங்கள் முன்னைய இரண்டினும் வன்மையுடையன. ஆதலின் அவைகள் மரப்பாவையை ஒக்கும்.

அன்னமயகோசமாகிய தூலசரீரம் மிகவும் பருமையும் வலிமையும் பெற்றிருக்கும். ஆதலின் அதற்கு தேர் உவமையாகக் கூறப்படும்.

மேற்கூறிய ஐந்து கோசங்களையும் ஆன்மாவானது வேறாயும் ஒன்றாயும் கலந்து நின்று இயக்குவிக்கும் நடிகன் ஒருவன் பல வகைக் கோலங்களையும் வேடங்களையும் மேற்கொண்டு அவ்வ வற்றின் வண்ணமாய் நன்று நடிக்கின்ற தன்மைபோல ஆன்மாவும் இவ்வைந்து கோசங்களின் வயப்பட்டு நின்று, இயங்கி நிற்கும்.

தோற்பாவைக் கூத்துந் தொல்லை மரப்பாவை யியக்கமுஞ் சீர்த்
தேர்ப்பாரிற்செலவும் வேறாய்ச் செலுத்துவோர் செய்திதானும்
பார்ப்பாய வேடங்கட்டியாடுவோர் பரிசும் போலும்
ஆர்ப்பாய காயந்தன்னை யான்மா நின்றாட்டு மாறே.

படைகொடு பவனி போதும் பார்மன்னன் புகும்போதில்லிற்
கடைதொறும் விட்டு விட்டுக் காவலு மிட்டுப் பின்னர்
அடைதருந் தனியே யந்தப் புரந்தினி லதுபோ லான்மா
உடலினி லஞ்ச வத்தை யுறுமுயிர் காவலாக

இத்தகையதொரு பெருந்தத்துவ நுட்பத்தையே திருக்கோயில்களில் நடைபெறுந் தேர்த் திருவிழா எளிய பாமரமக்களும் இனிது உணர்ந்து கொள்ளும் வண்ணம் உருவக முறையில் கட்புலனாக்கிக் காட்டி விளக்குகின்றன.

சைவசித்தாந்த நூல்களுள் பழைமையும் பெருமையும் வாய்ந்த ஞானாமிர்தம் என்னும் சிறந்த நூல் உடல் தேரில் உயிரின் உலா நடை பெறுவதாக தனது பாடல் ஒன்றில் விரிவாக முற்றுருவகம் செய்து விளக்கியிருக்கின்றது.

சிவஞானபோதம் ஆன்மாவை "அமைச்சர சேய்ப்ப நின்றஞ்சவத்தைத்தே" என்று அமைச்சரோடு கூடிய அரசன் என் உருவகஞ் செய்தது.

சிவஞான சித்தியார் அதனையே "படை கொடு பவனிபோதும் மன்னன்" என்னும் தொடரால் மேலும் விரித்துரைத்தது.

ஞானாமிர்தம் உடல் ஆகிய தேரில் உயிர் ஆகிய அரசன் உலகம் ஆகிய மாடவீதயில் உலா வருதலை மிக அழகாக உருவகஞ் செய்துள்ளது.

சிவஞானசித்தியார் முதல் செய்யுளில் உயிரானது தூயவுடலை இயக்குந் தன்மை ஒரு பெரிய தேரானது தரையில் ஊர்ந்து செல்லுதல் போலும் என்னும் கருத்தில் "ஆர்ப் பாயகாயந் தன்னை ஆன்மா நின்று ஆட்டுமாறு தேர் பாரிற் செல்லும் பரிசு போலும்" என கூறப்பட்டுள்ளதைக் காணலாம். பின்னைய செய்யுளில் உயிரை அரசனாக உருவகஞ் செய்து, உயிரானது உடலை இவர்ந்து ஊர்ந்து செலுத்தும் தன்மையை "மன்னன் படை கொடு பவனி போதல்" போலும் என்று குறிப்பிட்டிருத்தல் ஊன்றி உளங் கொளத்தக்கது.

திருத்தேர் விளக்கம்

தேரின் அமைப்பும் உறுப்புக்களும் பற்றி வேறு சில விளக்கங்களும் கூறப்படுவ துண்டு.

மந்தரகேசரி மலைகள் அச்சு, சூரிய சந்திரர் சக்கரம், ஆறு பருவங்கள் சந்தி, பதினான்னு உலகங்கள் பதினான்கு தட்டுகள், ஆகாயம் ஆசனம், உதயகிரி அஸ்த கிரிகள் கூவிரம், நதிகள் கொடிகள், நட்சத்திரங்கள் விதானம், மோட்ச உலகம் மேல்விரிவு, யாகங்கள் சட்டம், நாள் முதலியன குறுக்கு மரங்கள், அஷ்டமலைகள் தூண்கள், அஷ்டதிக்கு யானைகள் தாங்கும் ஆதாரங்கள், ஏழுகடல்கள் தேர்ச்சீலைகள், கன்ம ஞானேந்திரியங்கள் கலாங்கள், கலைகள், முளைகள், வேதாங்க உபாங்கமனு சாத்திரங்கள் மணிகள், வாயுக்கள் படிகள், நான்கு வேதங்கள் குதிரைகள், கங்கை

முதலிய தேவமாதர்கள் சாமர மிரட்டுவோர் ஊர்வசி முதலிய கணிகை மகளிர் நடனம் புரிவோர், மேருமலைவில், சரஸ்வதி வில்விற் கட்டிய மணி, வாசுகி நாண், விஷ்ணு பாணம், அக்கினிதேவன் பாணத்தின் முனை, வாயுதேவன் அம்பிறகு, பிரமன் சாரதி, திரிபுரங்கள் மும்மலம், தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி எனும் மூவசுரர்களும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனும் மூவகையான்மாக்கள், தேவபதம் மோட்சபத மாகியன் திருவடி எனப் பெரியோர்கள் விளக்கம் கண்டுள்ளனர்.

இதுவல்லாது தேரினை அண்டத்துடன் ஒப்பிடுவது போல பிண்டத்தோடும் ஒப்பிட்டுக் கூறுவர்.

உச்சிக்குடையை பிரமந்திரத்திற்கும் சக்கரங்களை தசவாயுக்களுக்கும் இருகால் களுக்கும் ஒப்பிடுவதோடு ஏனைய தேர் உறுப்புகளை எமது தேகத்தின் ஏனைய அம்சங்களோடும் ஒப்பிட்டுக் காட்டுவர்.

சக்கரங்களாகிய தசவாயுக்களை நிறுத்த அசைதல் முதலியவினைகள் ஒழியும். சீவன் தன் மனத்தை முறையே மேன்நோக்கி விளங்கும் உந்திக் குண்டலியிலிருந்து நாபிக்கும் பின் இருதயத்துக்கும், அங்கிருந்து கண்டம், வாய், நாசி, இருகண் வழியாக மேனோக்கி லயப்படுத்தி அங்கிருந்து புருவமத்தியிலும், துவாதசாந்தத்திலும் லயப்படுத்தி அங்கிருந்து பிரமரந்திரத்தில் லயப்படுத்திப் பரமானந்த ரூபியாக வேண்டும் என்பதையே தேரின் அமைப்பும் உறுப்பும் குறிக்கின்றன.

இத்தகைய பற்பல உயரிய தத்துவநுட்பங்களை உணர்த்தும் முறையில் தேர்த் திரு விழா அமைந்துள்ளது. ஊர்மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அன்புடன் கூடித் தேரை இழுத்து வலம் செய்வித்து இறைவனை வழிபட்டு மகிழ்கின்றனர். இதனால் மக்களிடையே யுள்ள வேறுபாடுகள் அனைத்தும் நீங்கி மக்கள் அனைவரும் அன்பினால் ஒன்றுபட்டு இன்பம் எய்தி வாழ்வதற்கு தேர்த்திருவிழா பெரிதும் துணைபுரிகிறது.

இவ்வண்ணம் எல்லோரும் இன்புற்று வாழ எல்லாம் வல்ல திருமுருகன் திரு வருளைச் சிந்தித்து வந்திப்போமாக.



சித்திரத் தேருக்கான அச்சுப்பார் ஏற்றும் நிகழ்வு.



ஆலயத்தில் பவளக்கால் ஏற்றும் வைபவத்தின் போது.

பள்ளம்புல முருகனின் தேர்பவனி

அடியான்

திருமுருகன் துணை

தேர் ஓடும் சீரிய நல் தெய்வப் பேரெழில் பொழி
பெரு வீதி எல்லாம்
கார் அமர் மேனிக் கணபதி திருக்காப்பு மகிழ்ந்து
அருள் கின்றார்

1 நல்லன எல்லாம் நாளும் அருளும்
பள்ளம்பல முருகன் பவனிவரும் தேர்க்காட்சி
உள்ளம் கொள்ளை கொள்ளுதடி – செல்வக் கிளியே
பொல்லாப் பெல்லாம் நீக்குதடி செல்வக் கிளியே

2 பார் போற்றும் பள்ளம்புல முருகன் தேர் ஓடும்
வீதி எல்லாம்
ஆர் ஆர் வந்தார்? நாராயணனொடு நான்முகன்
அங்கி குபேரன்
தார் அமர் கொன்றை அணியும் சிவனொடு
சக்தி உவந்து வாழ்த்துகின்றார்
கார் அமர் மேனிக் கணபதி திருக்காப்பு
மகிழ்ந்து அருள்கின்றார்

3 யோக சுவாமி போற்றிய தெய்வஞான முருகா
பாவியர் இருள்துயர் தீரத் திருத்தேரில் பவனி வருவாய்!
நாவினால் முருகா! அரோகரா! என நெகிழ்ந்து வாழ்த்தி
தேவர் நறுமலர் சொரியப் பேரழகு மிளிர் தேரினை இழுப்போம் வாரீர்!

4 முருகனின் தேர் ஓடும் வீதி எல்லாம் தம் நெஞ்சம்
உருகித் தொழும் அன்பர் முருகா! என ஓதிக் கண்ணீர்
பெருக முருகனின் பேருளை வேண்டிக் கை கூப்பும் கவின் கொள்காட்சி
அரியதோர் போரானந்தக் காட்சி! சீரிய திருமுருக பக்திக் காட்சி

5 தேவியர் இருவர் நீங்காத் தேவாதி தேவன் தாள்கள்
தாவில் நல் அன்பர் இன்பத் தமிழ் மேன்மைச் சைவம்
கோயிலின் தர்மகர்த்தா சபையினர் குழைந்த பக்திப்
பாவலர் பாடும் பள்ளம்புல முருகன் போற்றி! போற்றி!

தேர் ஓடும் வீதி எல்லாம் – திருப்பள்ளம்புல முருகா
அரிய பேரொழில் பொழியும் உன் தெய்வ
மெய்ஞ்ஞானப்பேருட் காட்சி – ஐயா!

திருமுருகன் துணை.

அப்பனே அருணகிரி ஆக்கியநற் திருப்புகழால்
இப்புவி மலர்ந்துதமிழ் இனிமைசெவி கண்டதையா
ஒப்பிலாப் புராணந்தந்து ஒளிர்ந்தனநற் கச்சியப்ப
பக்குவக் கதைதான் கேட்டு பாருளநாம் மெய்சிலிர்த்தோம்
தப்பினான் சூரபத்மன் தனயனே சிறுவனென்று
நற்புகழ் அறியாநின்று நாதனே சுமந்தான் நன்கு
அற்புதா பள்ளம்புல அரசனே திருத்தேர் தந்து
பொற்பதம் பதியென்றேநாம் போற்றுறோம் மகிழவாடா.

தேர் ஏறிவரும் பார்வதி பாலகன்

முருகன் அடியாள்

பள்ளம்புலம் உறை பரமசிவன் மைந்தா
பக்தர்குறை தீர்க்கவே பரிவோடு வந்திடுவாய் – எம்
உள்ளமதில் உன்நாமம் ஒலித்தெழவே
உவந்து உனக்கோர் தேர் அமைத்தாய்

தேர்ஏறி வந்தெமைத் தேற்றிடுவாய்
ஏர்பிடித்த மக்களென்றும் ஏற்றமுற
பார்புகழும் பலதொழிலும் வளம்பெறவே
நீர்சடையான் வள்ளலே வடிவேலா – தேர் ஏறி வந்திடுவாய்

ஆனைமுகனுக்கு இளையவனே அருட்குமரா
சேனையுடன் கிளர்ந்த அசுரர் குலம் அழித்தவனே
வானை நிகர் இடர்வரினும் எமைக்காக்க
மானனைய மருள்மாதருடன் தேர் ஏறி வந்திடுவாய்

பாரெங்கும் பரந்துசென்ற அடியவர்கள்
சீர்பெருகு திருவடியே சிந்தனையாய்
ஆர்வமுடன் அருகளைந்து அருந்தமிழால்
பேராயிரம் பரவி அருளமுதம்பெற பார்வதியாலகனே தேர் ஏறிவருவாய்

நின்றும் இருந்தும் கிடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன்மலர்ப் பாதம் – அடியவர்
ஒன்றும் அரும்பொருளே ஆறுமுகா
அன்று ஔவைக்கு அருள்அளித்துவா தேரேறி வந்திடுவாய்

அமரர் திரு.வீ.நா இராமச்சந்திரன்
(சண்முகானந்தசரியை மணி)
அவர்களை நினைந்து ....

வேலணை மத்திய மகா வித்தியாலய முன்புற பிரதான சாலையின் மேற்குப்புறமாக ஒரு 200 மீற்றர் தூரம் சென்று நின்று... திருவாளர் V.N.R ஐயா வீடென்றோ... அல்லது இராமச் சந்திரன் ஐயா வீடென்றோ... அல்லது மிகவும் மெதுவாக கொதியர் ஐயா வீடென்றோ.... கேட்டால் போதும் சின்னப்பிள்ளை கூட அவரது மரப் பலகையினாலான கேற்றைத் திறந்து வீதியின் வடக்குப்புறமாகவுள்ள V.N.R ஐயாவின் வீட்டினைக் காட்டி நிற்கும்....

ஐயா அவர்களிடம் ஏதாவது அலுவலாகப் போனால் வீட்டின் முன்புற வராந்தாவில் சிறிய வட்டவடிவமான மேசையின் முன் கதிரை போட்டு அமர்ந்து கோவில் சம்பந்தமாக ஏதும் கடிதம் எழுதிக் கொண்டிருப்பார்.... அப்படி அவர் இல்லையேல்... நிச்சயமாக அவரது அம்மையார் கூறும் வார்த்தை அவர் கோவிலுக்குப் போய்விட்டார் என்ற அன்பான பதிலுரை தான்... கோவில் என்றால் அவர் சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும்.... அவரைத் தேட வேண்டிய ஆலயம். எமது பள்ளம்புல முருகனின் திருப்பதி இல்லையேல் இக்கிராமம் அதுவும் இல்லையேல் அவரது வீட்டிற்கும் கோவிலுக்கும் இடையேயுள்ள மயிலப்புலம் வீதி....

முருகன் பதியில் இல்லையேல் அவர் குரல் எங்காவது எவரது வீட்டின் முன்பாவது ஒலித்துக் கொண்டிருக்கும். சற்றுக் கோபித்துக் கத்தும் குரல் என்னப்பா... எத்தனைதரம் நான் ஒருத்தன் திரியிறது.... ஒரு உணர்ச்சி இல்லையா... என தனது சைக்கிளில் இருந்த படி ஒற்றைக்காலை நிலத்தில் ஊன்றி வட்டமடித்தபடி கோவிலுக்குக் கூப்பிடுவார். ஏன் ஒரு இரண்டு பேராவது வந்து கோவிலைக் கூட்டக் கூடாதா...? இரண்டு மூன்று வாளி தண்ணீர் அள்ளிக் கழுவக் கூடாதா...? எனக் கத்துவார். கத்திக்கொண்டே இருப்பார்... முருகனிற்கு செய்யும் தொண்டினை விட அவரது அரிகண்ட கத்தலுக்குப் பயந்து கோவிலுக்குச்

செல்லத் தோன்றும். அவர் அழைப்பது எங்கு? எமது குலதெய்வமாக நாம் வழிபடும் எமது முருகனின் பதிக்குத்தான்.... ஆனாலும் எமது பொறுப்பற்ற தன்மை அவரைக் கண்டால் கொதியர் வாறாற்றா....வந்தால் வேலைதான் என ஓடி ஒளிக்க வைத்த காலம்... அதனை நினைத்து இன்றும் நாம் வருந்தியதுண்டு....

அன்று மின்சாரம் இல்லாத காலம் ஒரு வெள்ளிக்கிழமை... கார்த்திகை உற்சவம்...ஒரு விசேட தினம் என்றால் பெற்றோல்மக்ஸ் சுடன் ஓர் உருவம் வந்து கோவில் வாசலில் கால் பதிக்கும்... ஒருவராவது வந்து இந்த லைற்றை எடுக்கக் கூடாதா....? நான்தான் கொண்டர வேணுமென்று பார்த்துக் கொண்டிருக்கின்றீர்களா....? வேதனைப்பட்டு வருந்துவார்... ஒவ்வொரு கார்த்திகைத் தினத்திலும் முருககவசம் பாடும் போது அவரது கண்ணால் வழிந்தோடும் கண்ணீரே மண்டபத்தைக் கழுவிவிடும்....

அன்றைய காலப் பழமையும் சேதமுற்றதுமான ஆலயத்தைப் புது ஆலயமாக வெட்டுக்கல் கொண்டு அமைக்க எண்ணிய அறங்காவற் சபையில் ஒருவர் V.N.R ஐயா அந்தத் திருப்பணி சம்பந்தமாக ஓடித்திரிந்த ஒளியூட்டும் திருவுருவம் அப்புதிய ஆலயத்திற்குரிய பொதுத் திருப்பணிக்கும் தனிப்பட அமைந்த உபயத் திருப்பணிகட்கும் எவர் எவரைப் பிடிக்கலாம் என எண்ணித் துரத்திப் பிடித்து முருகன் ஆலயத்தை உருவாக்க அயராது உழைத்த உடலாளர் என்றால் மிகையாகாது....

1978ல் கும்பாபிஷேகம் காண ஆலயம் அமைத்து கும்பாபிஷேகங்களையும் நல்லபடி செய்வித்துத் தந்து இன்றைய ஆலயம் இவ்வளவு விரைவாக பூரணப்படுத்தப் பட்டு அமைய அடித்தளம் அமைத்துத்தந்த கனவான்களில் ஒருவர் எமது V.N.R ஐயா என்றால் மறுப்பதற்கில்லை.

தொடர்ந்து எமது முருகன் ஆலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த அலங்கார உற்சவ விழாவினை கொடியேற்றத்துடன் கூடிய பெருவிழா நடைபெறும் ஆலயமாக மாற்ற எண்ணி... அதன் ஏற்பாடாக கொடிமரம்... கட்டுத்தேர்.... என ஓடியாடி முயன்று உழைத்து முருகன் கருணையும் கைகூட 1988, 1989ல் கொடியேற்றி பெருவிழாக்கண்டு அழகிய பாரம்பரிய துணியினாலான கட்டுத்தேரில் எம்பெருமான் வள்ளி தெய்வசேனா சமேதராகப் பவனிவர உடலுருகி உழைத்த ஒப்பற்ற மனிததெய்வம் எமக்கும் அக்காட்சியைக் காட்டி நின்றது.

காலமாற்றம் எம்மக்களை இடம்பெயர வைக்க எம்முடன் இடம்பெயர்ந்த V.N.R ஐயா அவர்களும் அவரது துணைவியாரும் மக்கள் அழைக்க கொழும்பு சென்று வாழ்ந்தார்

என்பது உண்மையானாலும் அவர் வாழ்ந்தது மனத்தினால் எம்பெருமான் முருகனின் பதியாகத்தான் இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை கொழும்பு சென்று அவரைப் பார்க்கச் செல்லும் முருகன் அடியவர்களிடம் முருக நாமத்தைத் தான் பாடி பதிவு செய்த கசற்கொப்பியை போட்டுக் காண்பிக்கும் ஆவல் அவர் இன்றும் எங்கு வாழ்கின்றார் என எடுத்துரைக்கும்.

இயலா வேளையிலும் முருகனின் மாதாந்தப் பூசைப் பணத்திற்காக பன்னிருவரைத் தெரிவு செய்யும் ஆவலில் தெரிந்தவர்களிற்குக் கடிதம் எழுதுவதும்... எம்மையும் எழுதத் தூண்டி முகவரி எடுத்துத் தருவதும்.... கோவில் எப்படி நடக்கிறது. என்னென்ன வேலைகள் புதிதாக செய்துள்ளீர்கள் என வினவுவதும் அவரது தூங்காத முருகன் பக்திக்கு எடுத்துக்காட்டு. தன்னால் ஒருமுறையாவது வந்து பார்க்க உடல்நிலை விடுவதாக இல்லை எனக்கூறி கண்ணீர் மல்க மூக்குநீர் சிந்த விக்கி விக்கி அழும் முருக காதலர். V.N.R ஐயா.

அவரின் எண்ணப்படியே பின்னமைந்த அற்றங்காவற் சபையினர் உள்வீதிக் கொட்டகை, காறை... தெற்குவாசல் கொட்டகை... கொடிமரக்கலசம், பூந்தோட்டம் என சம்பந்தப்பட்ட உபயகாரர்களிடம் இருந்தும்... இன்னும் முருக அடியவர்களிடம் இருந்தும் நிதிபெற்று திருப்பணி செய்வித்தமை அவர் அறிந்து மகிழ்ந்தவிடயம். ஆனாலும் எமது தொடர்ந்த பணியாக இருந்த சித்திரத்தேர்த் தி ப் பணியினை கண்டு மகிழக் கொடுத்து வைக்காது அவரை எம்பெருமான் தன்பதம் சேர்த்து விட்டார். இன்று அவரது கனவு நிறைவாகி வீதியின் முன்றலில் நாயகமாக நிமிர்ந்துள்ள தேர்க்கொட்டகையினுள் எம்பெருமான் முருகனின் சித்திரத்தேர் அழகுபெற்று எம்பெருமானைச் சுமந்து பவனிவர ஆயத்தமாக மக்கள் வடம்பிடிக்க முன்நிற்கும் வேளை அம்மலரில் அந்த உத்தமரை நினைப்பது எமது நற்பணி. அவரும் இவ்விழாவை ஆத்மார்த்தமாக முருகனடியின் கீழிலிருந்து கண்டு மகிழ்வார் என எண்ணுகின்றோம்.

நீல நிறச் சைக்கிள் அதன் கான்ரிலில் தூங்கும் பிளாஸ்ரிக் வயர்க்கூடை அதனுள் சுட்டாறிய தண்ணீர் அதனுடன் சுற்றி வைக்கப்பட்டிருக்கும் றொட்டித்துண்டு அல்லது ஒரு பணிஸ்... அவைதான் அவரின் உடற்களைப்பை ஆற்றும் ஆகாரம்... வயிற்றுக் கொதியைச் சுமக்கும் மேனி.... முருக பணியையும் கூடச் சுமந்து நிற்கும். வெள்ளைவேட்டி திறந்த செந்நிற கொழுத்த உடற்கட்டு... தோளில் வெள்ளைப் பரமாஸ் சால்வை ஐயனே உன்னுருவம் இம்மண் மக்கள் மனம் நிறைந்த திருவுருவம். உன் ஆத்மார்த்தமான முருகபக்தி.... கனவு.... தீரும்வரை பின்வரும் அடியவரும் நிர்வாகமும் உன்வழி நின்று செயற்படும்.

பள்ளம்புலம் முருகன் தேரேறி வருகிறார் அவரைக் கண்டு தரிசியுங்கள் பலனைப் பெறுங்கள்

நாம் தேவஸ்தானங்களில் நிகழ்த்தும் பூசைகள் விழாக்கள் தேவர்களுக்குப் பிரீதி யாகவும் – மக்களுக்கு நன்மையாகவும் அமைகின்றன.

ஒரு அண்டு முழுவதும் செய்யும் பூசை களில் ஏற்படும் குறைபாடுகள் மகோற்சவத் தால் நிறைவு பெறுகின்றன. அஃதேபோல் கும்பாபிஷேகங்களும் 12 வருடங்களுக்கு ஒருமுறை நிகழ்த்தப்படுகின்றன.

மகோற்சவ விழாக்கள் – இறைவனின் ஐந்து தொழில்களை – படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் இவற்றைக் குறிக்கின்றன. கொடியேற்றம் படைத்தலைக் குறிப்பது.

இந்தச்சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி
முத்தியின்பம் பொருட்டேயாம்
என்பது நாவலர் பெருமான் திருவாக்கு

ஒன்று நம்மை நடத்துகின்றது. இரங்காமலிருக்கமாட்டாமை அதனியற்கை சரீராதிகள் நம்மை நன்மைப்படுத்த அது உபகரித்தவை. அதன் கருத்தறிந்து அவ ற்றை உபயோகித்தல் வேண்டும். கருத்தறிய வழியுண்டு அதன் கருத்தறியாத செயல் வீண்செயல்.

இது கலாநிதி பண்டிதமணி சி.கண பதிப்பிள்ளை ஐயாவின் மணிவாக்கு.

எனவே – வழிபாடெல்லாம் – எம்மை – ஆன்மாவை நல்வழிப்படுத்துவனவாக அமைய வேண்டும். இறைவன் கூறிய வேத வரம்புகளை நாம் அடிப்படையாகக் கொண்டு

வாழ்ந்தால் வழிபட்டால் எமக்கு நிச்சயம் சுகநிலை கிட்டும். அப்போது தான் "வா என்ற வான் கருணை" கைகூடும் ஆலயங்களில் நிகழும் நிகழ்ச்சிகள் எம்பெருமானுக்கு விருப்ப முள்ளவையாக அமைய வேண்டும். நெறிதவறிய கேளிக்கை நிகழ்வுகள் குளிக்கப் போனவன் சேற்றைப் பூசிக் கொள்வது போல் அமையும்.

பக்தர்கள் இங்கேவம்மின்நீர் உங்கள் பாசம் தீரப்
பணிமினோ – என்பது திருவாசகம்

"ஆவினுக்கருங்கலம் அரன் அஞ்சாடு தல்" – என்கிறார் அப்பர் அடிகள். பசு தருகின்ற பஞ்ச கௌவியமே, தேவர்களை வரவழைக்கின்ற யாகத்துக்கு முதற் பொருளாகின்றன. ஆனினம் வாழ்ந்தால் தேவர்களின் கருணை கிட்டும் மக்கள் சிறப்படைவர். நாடு செழிக்கும். இவற்றை அறிந்த சைவ வைஷ்ணவ அடியார்கள் பசுக்கொலை செய்யலாமா? சிந்தியுங்கள்.

மகோற்சவ காலத்தில் எம்பெருமான் திருத் தேரில் வீதிவலம் வருகிறார். – தேர் சங்காரத்தைக் குறிக்கும் சங்காரம் – அழிப்பது, சுகமான மாலை என்ற பொருள்களைக் குறிக்கும்.

முப்புரங்களையும் எரிக்க – சிவன் பிரணவத் தேரிலே வந்தாராம் – முப்புரம் என்பது மும்மலக் காரியாம் – (திருமந்திரம்) அதாவது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களையும் ஒடுக்கும் செயலே அந்தச் செயல் – மகோற்சவ காலத்தில் தினமும் வழிபட்ட அடியார்களின் மும்மலங்களையொடுக்கி – மறுதினம் அருளலாகிய தீர்த்தம் வழங்குகிறான் எம்பெருமான்.

தேருக்குச் சுவாமி வரும் போது ஆடும் தாண்டவம் சங்கார தாண்டவமாகும். அழித்தல் என்பது பிறவிச் சூழலில் ஓயாது உழலும் உயிர்களுக்கு ஓய்வளிக்கும் அருட்செயல். ஒருமுருகம் – எட்டுக்கரம் – உடையவராக வலக்கரங்களில் அபயம், சூலம், பாசம், தமருகம் இவற்றைத் தாங்கியும் இடக்கரங்களில் கபாலம், அக்கினி, கூலம் – கஜஹஸ்தம் ஆகிய வற்றைத் தாங்கியும் வருவார் கௌரியும் நந்தியும் பக்கத்தில் நிற்பார்கள்.

இந்த நடனத்துக்குக் கொடுகொட்டி என்று பெயர். இந்த நடனத்துக்குத் தக்கபடி அம்பிகை சீரும் தூக்கும் பரணியுமாகிய தான வகைகளைப் பக்கத்தில் நின்று போடுவார் என்று கலித்தொகை கூறுகின்றது. இத்தாண்டவத்தால் அச்சம், வியப்பு, விழைவு – பொலிவு என்பன புலப்படுமாம்.

இத்தகைய அற்புதம் மலரும் தேர் விழாவைத் தரிசிப்பதால் மல ஒடுக்கம் ஏற்பட்டுச் சுக வாழ்வைப் பெறலாம். எம பயம் நீங்கலாம். இம்மையும் மறுமையும் தெய்வக் கருணை பெறுவதற்கு மிகவும் உதவுவது தேர்க்காட்சியாகும்.

எமது உடம்பே ஒருதேர். அதற்குள் ஆன்மா நின்று செயற்படுகிறது. அந்த ஆன் மாவை சிவாம்சமாக்குவதே – கண் ணினால் அவர்தம் நல்விழாப் பொலிவு கண்டார்தல் ஆகும். வள்ளி, தெய்வ யானை சமேத பள்ளம்புல முருகன் இன்று 06.07.2009 தேர் ஏறி வருகின்றார். வாருங்கள் அவர் அழகைப் பாருங்கள் தரிசியுங்கள் அவரடியார்களுடன் சேருங்கள் அவரின் பலனைப் பெறுங்கள் என்று வேண்டி நிற்கின்றோம்.

சிறுதேர் உருட்டியருளே

தந்தை தாய் மூத்தோர்கள் சான்றோர்கள்
குரவர்கள் சாற்றுநன் மொழி கொளாமல்
தட்டிக் கழித்திடும் பித்தரின் காலம், முது
சமய நெறி பற்றிடாமல்
நிந்தைசெய் தெனதுநான் என்றுபல கொடுமைகள்
நினைத்தபடி செய்யுங்காலம்
நிமலனது கோயிலில் தெய்வீக மில்லாத
நிகழ்ச்சிவைத் தலையுங்காலம்

மந்திமனை தேடாமல் மற்றவர் மனையழிக்கும்
வஞ்சமனக் கயவர்காலம்
மனுதர்ம மில்லாத காலத்தில் வாழ்ந்துனது
மலரடியைப் படிப் பிடிப்பேன்
சிந்தைதெளி தெய்வீக சந்ததி செழித்திடச்
சிறுதேரு ருட்டியருளே
சந்தனங் கமழு சரவண பள்ளம் புலத்திறையே
சிறுதேரு ருட்டியருளே.

சரவணன் பிள்ளைத்தமிழ்

தேரின் மகிமையும் தத்துவச் சிறப்பும்

பிரதாசிரியர் கலாகீர்த்தி
ப.கோபாலகிருஷ்ணஐயர்

சிவாகமங்கள் விதித்துக் கூறும் நைமித்தியக் கிரியைகளில் மகோற்சவம் உன்னத மானது. இறைவனது ஐந்தொழில் தத்துவத்தைக் குறிக்கும் மகோற்சவத்தால் அடியார்கள் பெறும் பயனும் சிறப்பாகும். சாம்பவ தீட்சையை நல்கும் சிறப்பு மகோற்சவங்களுக்கு உண்டு. இறைவனுக்குக் கொடியேற்றம் நிகழ்ந்து இடம்பெறும் உற்சவங்களில் பிரமோற்சவம் எனச் சிறப்புப் பெறும் இரதோற்சவம் சிறப்பங்கமாக விளங்குவது குறிப் பிடற்பாலது.

இரதோற்சவம் இறைவனது சங்காரத் தொழிலாகிய அழித்தலைக்குறித்து நிற் கின்றது. ஆன்மாக்களிடத்தே தீயவற்றை நல்கும் ஆணவமலத்தை அழித்து புனித தத்துவத்தை ஏற்படுத்தும் கருணைமிகுந்த சங்காரமாக இது அமையும். எமது பிர தேசத்தில் உள்ள ஆலயங்கள் திருப்பணி கள் மூலம் புதுப்பொலிவு பெறுவதுடன் பல ஆலயங்கள் புதிய ராஜகோபுரங்களும் சித்திரத்தேர்களும் நிர்மாணிக்கப்படுகின்றமை கண்கூடு. ஆலயமொன்றில் ஆலய அறங்காவலர்கள் அடியார்கள் ஆகியோரது கூட்டு முயற்சியினால் சித்திரத்தேர் உருவாகி இறைவன் தேரில் ஆரோகணித்து வரும் காட்சி யைக் காண்பது பெரும் பேறாகும். ஊர் கூடி தேர் இழுக்கும் செயல் உயர்ந்த சிவபுண்ணிய மாகும். தேர்த்தத்துவம் உணர்த்துவது ஆணவத்தின் அடக்கமாகும். அடியார்கள் அகந்தை அகன்று அன்புள்ளம் கொண்டவர்களாக உன்னதமான சமய வாழ்வு வாழ உதவும் ஒரு புண்ணிய விழா இதுவாகும். அடியார்கள் ஒவ்வொருவரும் மற்றவர் மீது அன்பு பாராட்டி சிவநேயச் செல்வர்களாக இறைவன் சந்நிதியில் ஒன்றுகூட வழி வகுப்பதும் இவ்விழாவே.

இப்பூவுலகுக்கு கீழே ஏழு உலகங்கள். பூவுலகு உட்பட மேலே ஏழு உலகங்கள் உண்டு. அப்பால் வைகுந்த சத்திய உலகங்கள். அதற்கும் அப்பால் சிவலோகம் என்பது ஐதீகம். இவையனைத்தையும் அடக்கியிருப்பது ஓர் அண்டம். ஓர் அண்டத்தை எமது

நினைவுக்குக் கொண்டு வருவது இறைவனுக்குரிய தேராகும். பூவுலகம் அண்டமாகிய தேரின் நடுத்தட்டுப் போன்றது. அண்டமாகிய தேரில் பூவுலகாகிய தட்டில் இறைவன் ஆரோகணித்து ஆன்மாக்களுக்கு அருள் பாலித்து இரட்சிக்கின்றான்.

வாஸ்து சாஸ்திரங்களில் கோயில்களின் பாணி மூன்றாக வகுக்கப்பட்டுள்ளன. அவை நாகரம், திராவிடம், வேஸரம் எனப்படுகின்றன. தேரின் அமைப்பு முறைகளிலும் இத்தகைய பாணிகள் உள்ளன. அதாவது சதுரவடிவான தேரை "நாகரம்" எனவும் எண்கோணவடிவான தேரை "திராவிடம்" எனவும் வட்டவடிவான தேரை "வேஸரம்" எனவும் அறுகோண வடிவமான தேரை "அத்திரம்" எனவும் சிற்பநூல்கள் கூறுகின்றன.

சிவாலயங்களில் தேர்த்திருவிழா புராணங்கள் விதந்து போற்றும் சிவனது அட்ட வீரட்டங்களில் ஒன்றாகிய திரிபுர தகனத்தோடு தொடர்புடையது. தேவர்களுக்கு இன்னல் புரிந்த மூன்று கொடிய அசுரர்களை அழித்தருள சிவபெருமான் திருவுள்ளம் கொண்டார். அதனால் அவர் ஏறிய தேர் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. பூமியைத் தேராகவும் சூரிய சந்திரர்களைச் சக்கரமா கவும் விண்மீன்களை விதானமாகவும் மேரு மலையை வில்லாகவும் வாசுகியை நாணாகவும் நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும் பிரம தேவனைச் சாரதியாகவும் கொண்டு தேர் ஏறிப் போருக்குப் புறப்பட்டதாக பௌராணிக மரபு கூறும். திருத்தேர் பற்றிய மற்றுமொரு விளக்கம் பின்வருமாறு அமைகின்றது. உச்சிக்குடை பிரமாந்திரம். கலசம் சோடசாந்தத் தானம். மேலுள்ள முதலாமடுக்கு துவாத சாந்தத் தானம், இரண்டாம் அடுக்கு மஸ்தக ஆதித் தானம், மூன்றாம் அடுக்கு மஸ்தக மத்தி யத்தானம், நான்காம் அடுக்கு மஸ்த காந்த ஸ்தானம், ஐந்தாம் அடுக்கு லலாட மத்தி, ஆறாம் அடுக்கு புருவமத்தி, நடுவேயுள்ள ஏழாம் அடுக்கான 32 குத்துக்கால்கள் 32 தத்துவம், முற்றுறைகள் கண்கள், பிற்று றைகள் சிகைகள், பாகத்துறைகள் இரு செவி, பீட முற்பகுதி வாய், இடப்பக்கத்திலுள்ள இரு குதிரை வடிவங்கள் இடப்பாக சூரிய சந்திர கலாவாசிகள், வலப் பக்கத்திலுள்ள இரு குதிரை வடிவங்கள் வலப்பாக சூரிய சந்திர கலாவாசிகள், சாரதி வடிவம் மும்மலரூபமும் நாசியுமாகும். எட்டாம் அடுக்கு இடப்குதி அந்தக்கரண சொரூபம். இது கண்டத் தானமாகும். அதன் கீழ் இடப்பகுதி ஐந்தவத்தை, ஐங் கோசம், இராகாதி பதின்மூன்று அதன் குணங்களுமாகும். இது இருதயம். கீழ்ப் பகுதி தசேந்திரியமும் நாபித்தானமுமாகும். அதன் கீழுள்ள அச்சு பஞ்சபூதம் குண்டலினி சத்தித்தானம் என்பனவாகும். சக்கரங்கள் தச வாயுக்களும் இருகால்களுமாகும். இவ்வாறு தேரானது பிண்ட வடிவத்தை நிகர்த்துள்ளதாகக் கூறப்படுகின்றது. சீவன் தன் மனத்தை படிப்படியாக லயப்படுத்தி பரமானந்த நிலையை அடைய வேண்டுமென் பதையே தேரின் அமைப்பும் உறுப்பும் குறிக்கின்றன.

தேர் ஒரு நடமாடும் ஆலயம், ஆலயத்தை நிகர்க்கும் வண்ணம் சிறந்த கலையழகும் கம்பீரமும் இணைந்து தேருக்கு புதியதொரு பரிமாணத்தைத் தருகின்றமை குறிப் பிடற்பாலது. இறைவன் திருவருளைப் பெற அடியார்கள் ஆலயத்தையே நாடிச் செல்வர், ஆனால் அடியார்களை ஈர்த்து ஆட்கொண்டருள கருணை மேலீட்டினால் அவர்களைத் தேடி இறைவன் வீதி உலா வருவதற்கு வழிவகுப்பது தேர். தேர் போன்ற வடிவிலமையும் சிற்பக் கோயில்கள் வடக்கே கொனார்க் போன்ற இடங்களில் உண்டு. ஆனால் மரத்தைக் கொண்டு சிற்பக் கலைச் சிறப்புடன் உரு வாக்கப்பட்டுள்ள பிரமாண்ட தேர்கள் தமிழகத்துக் கோயில்களில் உள்ளன. தேரின் உறுதிமிக்க கம்பீரமான சக்கரங்கள் குறிப்பிடத்தக்கன. சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் தேரின் அழகைக் கூட்டுகின்றன. தமி ழகத்து ஆலயத்தில் உள்ள தேர்களில் மிகப்பிரமாண்டமான புகழ்பெற்றது திருவாரூர்த்தேர். மிகச்சிறந்த சிற்பப் படைப்புக்களும் காண்போரைப் பிரமிக்க வைக்கும் கம்பீரத் தோற்றமும் கொண்டது இத்தேர். எனவே தான் "திருவாரூர் தேரழகு" என்ற மொழி பிரபலமாயிற்று. இதனைப் போன்று ஸ்ரீ வில்லிபுத்தூரர், காஞ்சி ஏகம்பரேசுவரர், மதுரை, ஸ்ரீரங்கம், குடந்தை, சாரங்கபாணி ஆகிய ஆலயங்களில் உள்ள தேர்களும் சிற்ப அமைதிகளுடன் ஒப்பற்ற அழகுடன் விளங்குகின்றன. தேரின் சில்லிலிருந்து பீடம் வரை மரத்தினால் சிற்ப நுட்பங் களுடன் உருவாக்கும் மரபு உள்ளது. அதன் மேற்பகுதி சிகரம் வரை தடி, கம்பு முதலிய வற்றாலும் பலகலை நுட்பம் நிறைந்த பொருட்களாலும் கட்டி அழகுபடுத்துவது மரபு. பல வர்ணத் துணிகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு சிகரம் வரையும் வருடந்தோறும் கட்டியமைக்காமல் நிரந்தரமாக சிற்ப நுட்பங்களுடன் தேரை நிர்மாணிக்கும் மரபு இலங் கையில் உள்ள கோயில்களில் இடம்பெற்று வருகின்றது. இப்படி அமைக்கப்படும் ஊர்தி இரதம் என்ற பெயரையும் பெறுகின்றது. இதன் அடிப்படையிலேயே ரதோற்சவம் என இவ் வுற்சவம் பெயர் பெற்றது. பழனி, திருப்பதி போன்ற இடங்களில் தங்கஇரதம், வெள்ளி இரதம் இறைவன் பவனிவர பயன்படுவன. எந்தத் தெய்வத்திற்குத் தேர் உருவாக்கப்படு கின்றதோ அத்தெய்வத்திற்கு புராண வரலாற்று அம்சங்கள் சிற்ப அமைதிகள் ஆகிய வற்றோடு கூடியதாக அது அமையும். தேரின் அளவும் தேவைக் கேற்ப வேறுபடுவதுண்டு. கட்டுத் தேர், சித்திரத்தேர் என அவை வேறுபடுகின்றன.

தேரின் சில்லுக்கு மேல் அமைந்துள்ள பகுதிகள் கீழிருந்து மேலாக ஆறு பாகங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையான : பூதஸ்தானம், சித்தூர்மட்டம், பேரூர்மட்டம், நராசனம், தேவாசனம், சிம்மாசனம் என்பனவாகும். தேர்கள் முக பத்திர வேலைப் பாடுகளுடனும் உருவாக்கப்படுகின்றன. கீழே அதிஷ்டானப்பகுதியில் தெய்வீக வடிவில் சிங்கங்கள், யாளிகள், யானைகள், மகரங்கள், நுட்பமான மடிப்பு வேலைப்பாடுகள் இடம் பெறுவன. மற்றும் நடனமாடும் கலைஞர், பூத யட்சகர்கள் ஆகிய வடிவங்களும் சித்திரிக்

கப்படுவன. இறைவனையும் ஆன்மாக்களையும் இணைக்கும் ஓர் அற்புதமான கலை வடிவமே தேர் ஆகும். சமய தத்துவங்கள், கலை அம்சங்கள், சிற்ப நுட்பங்கள், நிர்மாணச் சிறப்பு ஆகி யவை தேரின் முழுப் பரிமாணத்திற்கும் துணை செய்கின்றன. தேரினை நிர் மாணிப்பதற்குரிய மரங்கள் பற்றிய சிற்ப சாஸ்திரங்கள் கூறுகின்றன. சால விருட்சம், நாவலர் சாரம், சரளம், அர்ஜுனம், மதூகம், பாபுரம், கருங்காலி, மகிழ், கிருதம், நன்னி ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.

சிவாகம மரபில் இத்தகைய கலைச் சிறப்புடன் கூடிய தேரினை உருவாக்கும் சிற்பக் கலைஞனின் பணி புனிதமானது. புதிய தேரின் வெள்ளோட்டமும் உரிய சமயச் சடங்கு களுடன் நிறைவேறி பக்தி பூர்வமாக சிற்பக் கலைஞரும் அடியார்களும் இணைந்து நிறை வேற்றுவது மரபு. சிற்பக் கலைஞரது கலைத்திறனையும் சிற்ப நுட்பத்தையும் நிர்மாணத் திறனையும் பாராட்டிக் கௌரவிக்கும் மரபு. இக் கலைவடிவத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் அனைவரும் ஒன்றிணைந்து ஊர்கூடி தேர் இழுத்து எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரராகும் வண்ணம் இத் தேர்த்திருவிழா சிறப்படைவதாகுக!

ஐயனே கண்ணீர் ஓட அவலமே பட்டு நொந்து
மெய்யெலாம் இளைக்க இன்று மேவிடும் திருத்தேர்தந்து
கையொடு வேல்கொண்டேகி களைந்திடப் பக்தர் துன்பம்
பொய்யென ஆகநாமும் பொங்கியே மகிழுங்காலம்
வள்ளலே பள்ளம்புலத்து வடிவனே கருணாமூர்த்தி
கண்ணனின் மருகா எம்மைக் காத்திடக் கோவில்விட்டு
மெள்ளவே வாரீர்கந்தா மேவிடக் காத்து நிற்கும்
வண்ணமாம் தேரிலேறி வடிவனே ஆடிவாடா.

தேர்த்திருவிழா இறைவனுக்குரிய ராஜோபசாரம்

சிவஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்கள்
இந்துநாகரீகப் பேராசிரியர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

இறைவனின் உறைவிடம் கோவில் எனப் பிரசித்தமான பெயர் பெற்றது. கோ என்பதற்கு அரசன் என்று பொருள் உண்டு. இல் என்றால் வீடு எனப் பொருள்படும். கோவில் என்பது அரசன் வசிக்கும் மாளிகை. அரசனைத் தெய்வமாகப் போற்றும் பாரம் பரியம் நெடுங்காலமாக இந்துப் பண்பாட்டில் நிலவிவருவது, எல்லாத் தெய்வங்களின் அமிசங்கள் திரண்டு உருப்பெற்றதன் விளைவு அரசன் என மூலநூல்கள் கூறும். அரசன் தெய்வம் என்ற இரு நிலைகளும் வேறுபாடு இன்றி நெருங்கி ஒற்றுமை பெற்றதன் விளைவை கோயில் என்ற பிரயோகம் தெளிவாகக் காட்டுகின்றது.

உபாசாரங்கள் பெரியவர்களுக்குச் செய்யும் உயரிய மரியாதையாகும். அவரவர் அந்தஸ்துக்கு ஏற்ப மரியாதை செலுத்தும் மரபு இன்றும் எம்மிடை நிலவி வருகின்றது. தெய்வத்துக்குச் செய்யும் உபசாரம் தேவோபசாரம் அரசருக்குச் செய்யும் உபசாரம் ராஜோபசாரம், சந்தனம், மலர், தூபம், தீபம், நைவேத்தியம் என்ற ஐந்தும் அடிப்படை களான தேவோபசாரங்கள். இவை 16 ஆக விரிந்து சோடசோபசாரங்கள் எனப்படுகின்றது.

அரசனுக்குச் செய்யும் உபசாரங்கள் பல. இவற்றை அரசன் கொலுவீற்றிருக்கும் வேளை நிகழ்ந்ததாக நூல்கள் வருணிக்கின்றன. ஆஸ்த்தான மண்டபத்தில் அரசன் சிங்காசனத்தில் கொலுவீற்றிருப்பது அரச மரியாதைகளில் முதன்மையானது. அவனைச் சுற்றிப் பணியாளர் பலர் பலவகை உபசாரங்களைச் சமர்ப்பிப்பர். இவற்றுள் முக்கிய மானவை சாமரை இரட்டல், குடை பிடித்தல், ஆலவட்டம் ஏந்தி நிற்றல் முதலியன. அரசன் பவனிவருதல், வரும் பொழுது நெற்பொரி, மலர் தூவுதல், குதிரை ரத கஜ பதாதி அணி வகுப்புக்கள், யானை, ஒட்டகம் முதலியன முன் செல்ல அரசன் பவனிவருதல் தனிச்சிறப்பு வாய்ந்தது. அரசனின் பெருமதிப்பை வெளிப்படுத்தி நிற்பன. இவ்வகை உபசாரங்களில் முக்கியமானது அரசன் தேரில் பவனி வருதல். போருக்குப் புறப்படும் வேளையும் வேட்டை

யாடும் வேளைகளிலும் அரசனுக்கு தேர், குதிரை ஆகியன ஊர்திகளாக அமைந்தன. இன்று இதுவரை கூறப்பட்ட ராஜோபசாரங்கள் தேரில் பவனி வருதல் உட்பட கோயிலில் எழுந்தருளி யிருக்கும் கோவாகிய இறைவனுக்கு நிகழக் காண்கின்றோம். கோயில்களில் நிகழும் ஆடம்பரமான நிகழ்ச்சிகள் யாவுமே ராஜோபசாரமாக அமையக் காண் கின்றோம். மாலைகளால் வகைவகை யான அணிகலன்களால் தங்க வைரகிரீடங்களால் அணிசெய்தல், பலவகை ஊர்திகளில் வாகனங்களில் பவனி வரும் படி எழுந்தருளச் செய்தல் யாவுமே ராஜோ பாசாரங்கள். இவ்வாறு நிகழும் ராஜோபாசாரங்கள் மரபு ஒன்றை அடிப்படையாகக் கொண்டு விரியலாயின. இம் மரபை விபரித்துக் கூறுவன ஆகமங்கள்.

இவ்வகை உபசார வரிசைகளுள் ஒன்றாக அமைவதும், தலை சிறந்ததும் தேர்த் திருவிழாவாகும். பிரமோற்சவம் எனப்படும் பெருந்திருவிழா ஆலயங்களில் இறுமாப் பெய்தினார். இவ்விறு மாப்பு இறைவனுக்குப் பெரும் சிரிப்பை ஊட்டியது. நடைபெறும் பிரமோற்சவத்தில் நிகழும் விழாக்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தது தேர்த்திருவிழா. தேர் அரசர்களால் போரில் பெரிதும் உபயோகிக்கப்பட்டதைப் பழைய காலத்துப் போர்முறை களின் வருணனைகளிலிருந்து திந்து கொள்ளப்படலாம். குதிரைகளால் இழுத்துச் செல்லப்படும் பெரும் ஊர்தியாகிய இரு பொருத்தமான சில்லுகள் இரதத்தை இயக்க வைப்பன. குதிரைகளைச் செலுத்தும் சாரதி தனக்குரிய ஆசனத்தில் அமர்ந்திருப்பான். அரசன் தேரின் நடுவில் கம்பீரமாக இருந்து போர் நிகழ்த்துவான். போரே அரசனின் வீரத்தைப் பிரகடனம் செய்யும் நிகழ்ச்சி போரில் ஈட்டும் வெற்றியே அரசன் வீரத்தை, பெருமையை புகழை உயர்த்திக் காட்டும்.

அரசனே கண்கண்ட தெய்வம். தெய்வம் அரசனெனப் போற்றுதற்குரியது என்று அரசனுக்கும் தெய்வத்துக்கும் உயர்ச்சி கற்பித்த அடிப்படை நிலையில் கோயில் வழிபாட்டு முறை இராஜோபசாரங்களை கோயில்களில் இடம்பெறச் செய்தது. வீரத்தினால் சிறப்பு மிகும் அரசனைப் போன்று தெய்வமும் வீரம் மிக்க தோற்றமும் பொலிவும் பெற உருவானதில் வியப்பெதுவுமில்லை. அட்டவீரட்டானங்கள் இறைவனின் எட்டுச் செயல்கள் நிகழ்ந்த இடங்கள், முப்புரங்களை எரித்தது. காமனைக் கவர்ந்தது, காலனை உதைத்தது, அந்த கனை அழித்தது முதலான எட்டு வீர நிகழ்ச்சிகள் நிகழ்ந்த எட்டுப் பெருந்தலங்கள் சிவபிரானைத் தலைசிறந்த வீரனாகச் சித்தரிக்கக் காண்கின்றோம். சிவபிரானின்றும் வெளிப்பட்ட முருகன், ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களும் கொண்டு தோற்றும் பொழுது அவன் பன்னிரு திருக்கரங்களும் திலைசிறந்த வீரனுக்குரிய சின்னங்களையும் படைக்கலங்களையும் தாங்கி நிற்கக் காண்கின்றோம்.

இதுவரை கூறிய கருத்துக்களை முக்கிய அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது தேரில் இறைவனை எழுந்தருளுவித்து விழா எடுப்பதன் காரணம் தெளிவாகும். முன்னர் கூறியவாறு தேரமைப்பிலும் மரபு, வழிகளை வகுத்து வரையறை செய்கின்றது. தேர் இவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை ஆகமங்களும், சிற்ப நூல்களும் வரைவு காண்கின்றன. தேர் அசைந்து பவனிவரும் அமைப்பைக் கொண்ட கோயில் என்றே சொல்லலாம். கோயில் கருவறை போல் விமானம் தூபி முதலிய அம்சங்களைத் தாங்கி எழில் மிகுந்து விளங்குவது கவனிக்கற்பாலது. இன்னும் சற்று ஆழ்ந்து நோக்கும் பொழுது கோவில்கள் கூட தேரின் அமைப்பை ஏற்று இருபாகங்களிலும் பெரும் சில்லுகள் பொருந்தியதாக குதிரைகளால் இழுக்கப்படும் நிலையில் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். கோயில்களில் இறைவன் வீரச் செயல்களையும் கோலங்களையும் சித்திரங் களையும் இடம்பெறச் செய்திருப்பது போன்று, தேரின் அடித்தளம் அதாவது சில்லி லிருந்து பீடம் வரையுள்ள பகுதிகளை 3 தளங்களாகவோ 5 தளங்களாகவோ வசதிக் கேற்ப பிரித்து ஒவ்வொரு தளத்திலும், இறைவன் திருவருட் கோலங்களையும், பெருமை களையும், வீரச் செயல்களையும் சித்தரிக்கப்பட்டிருக்கக் காண்கின்றோம்.

சிவபிரான் நிகழ்த்திய அட்ட வீரட்டங்களில் முப்புரங்களையெரித்த நிகழ்ச்சி திரிபுர தகன மெனப்படும். இத்திரிபுர தகனத்திற்காக இறைவன் புறப்பட்ட கோலாகலமான வைபவத்தை புராணங் கள் வருணிக்கக் காணலாம். உலகமே தேர், வாசுகி, நாண், சூரிய சந்திரர்கள் இரு சில்லுகள், நான்கு வேதங்களும் நான்கு குதிரைகள், பிரமன் சாரதி, மேருவில், விஷ்ணு வில்லிலிருந்து விடுபட்டு அரக்கர்களை அழிக்கும் அம்பு தன்னிலேதான் அரக்கர்களின் அழிவு நிகழப் போவதையிட்டு விஷ்ணு இச்சிரிப்பு அட்டஹாஸம் எனப்படும். இச்சிரிப்பின் வலிமை முப்புரங்களையும் சாம்பராக்கியது. இங்கு இறை வன் தேரில் போருக்காக இவர்ந்ததும் தேரின் அமைப்புப் பற்றிய வர்ணனை யையும் தெளிவாகக் காணலாம்.

தேர்ச்சில்லிலிருந்து இறைவனை வீற்றிருக்கச் செய்யும் பீடம் வரை மரத்தினால் சிற்ப நுட்பங்கள் பொலியும் வண்ணம் செய்வது மரபு. அதன் மேற்பகுதி சிகரம் வரை ஆண்டு தோறும் விழாவின் போது தடி, கம்பு முதலியவற்றாலும் பல கலைநுட்பம் வாய்ந்த பொருட் களாலும் கட்டிக் கோயில் அமைப்பினைக் கொண்ட விமானம், தூபி முதலியன விளங்கச் செய்வதும் மரபு. திருவாரூர்த் தேரழகு என்ற மொழி பிரசித்தமானது. இந்தியாவில் பிரசித்தமான ஆலயங்களில் எல்லாம் தேர் இவ்வாறே பீடம் வரை சித்திர வேலைப்பாடு

களுடன் அமைக்கப்பட்டு மேல் வேலை, மேற்கூறியவாறு பல வண்ணத் துணிகளாலும் பல நுட்பமான பொருட்களாலும் அமைக்கப்பட்டுவதை அங்கு காணலாம். இதைத் தேர் என்று சொல்வது மரபு. மேல் வேலையையும் வருடந்தோறும் கட்டி அமைக்காது நிரந்தர மாகச் சிற்பநுட்பங்களுடன் செய்யும் வழக்கத்தை இலங்கையில் உள்ள கோயில்களில் கூட்டு வேலைப்பாடுகளுடன் தேரைக் கட்டி எழுப்பு வதுண்டு. மேல் வேலையும் மரத்தினால் சித்திர வேலைத்திறமை நிரந்தரமாக மிளரும் அமைப்பைக் கொண்ட இவ்வகை யூர்தியை இரதம் என்று சொல்லுவது மரபில் வந்து விட்டது. பழனி, திருப்பதி போன்ற தலங்களில் தங்க இரதங்களில், வெள்ளி இரதங்களில் இறைவன் பவனி வரக் காணலாம்.

தேரில் வீற்றிருந்து சகல உபசாரங்களுடன் பவனிவரும் தெய்வத்தைத் தரிசித்தல் இம்மைக்கும் மறுமைக்கும் பெரும் பயன் தரும் என நூல்கள் கூறுகின்றன.

பிரமனைச் சிறையிலிட்டாய் பிதற்றிய தேவர்தங்கள்
குறையினைக் கேட்டெழுந்தாய் குன்றென நின்றாய்அங்ஙண்
கரனவன் தம்பியாகிக் கள்ளியாள் வள்ளிதன்னை
தமையனார் துணைதான் கொண்டு தாங்கினாய் பாகமாக
பரமனார் உமையாள் மைந்தா பற்றினால் பள்ளம்புலத்தில்
உறைதல மூர்த்தியானாய் உற்றனம் உந்தன்தாளை
சிரமெனக் கொண்டோம் வேளே சிறந்தெழுதேரிலேறி
அகமெலாம் குளிர எங்கள் ஐயனே ஆடிவாடா.

தேரின் மகிமை

இலக்கியகலாநிதி முனைதுமணி
சி.கணபதிபிள்ளை அவர்கள்

"நமக்கு இந்தச் சரீரம் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது நாவலர் பெருமான் வாக்கு, எங்குமாய இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையால் உருவத்திருமேனி தாங்கி எழுந்தருளியிருக்கும் இடமே ஆலயம். ஆகவே ஆலய வழிபாடு மிகவும் முக்கியம். "ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்றார் உலக அன்னையாகிய ஔவைப்பிராட்டியார்.

ஆலயங்களில் இடம்பெறும் விழாக்கள் சிறப்பு நோக்கி "மஹோற்சவம்" என்று சொல்லப்படுகின்றன. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருத்திய உண்மைகளைப் புலப்படுத்துகின்றன. விழாக்களில் இரதோற் சவம் (தேர்த்திரு விழா) முக்கிய இடம் பெறுகின்றது.

இந்த உடம்பு ஒப்பற்றதொரு தேர், உயி ரானது உடம்பை இயக்கிக் கொண்டிருக் கிறது. உடல் வெறுஞ் சடம். உடலாகிய தேர் தன்னை இயக்கிக் கொண்டிருப்பது உயிர் என்பதை அறிவதில்லை.

உயிரும் ஒரு தேரே. உயிரை உயிர்க் குயிர் தான் இயக்கிக் கொண்டு உயிராகிய தேரில் வீற்றிருக்கின்றது. உயிர்க் குயிர் தான் கடவுள். இந்தப் பூமியும் இறைவனுக்கு ஒரு தேரே. பூமியாகிய தேரில் இறைவன் எழுந்தருள் புரியும் உண்மையை உணர்பவர் களுக்கு இவ்வுலகில் யாதுமோர் குறைவில்லை. உயிரும் பூமியும் இறைவனுடைய சிறிய தேர்கள்.

பூவுலகுக்குக் கீழே ஏழு உலகம். பூவுலகு உட்பட மேலே ஏழு உலகம் அப்பால் வைகுந்த சத்திய உலகங்கள், அதற்குமப்பால் சிவலோகம். இவையனைத்தும் அடங்கியது ஓர் அண்டம். ஓர் அண்டத்தை ஞாபகப்படுத்துவது தேர்.

பூவுலகம் அண்டமாகிய தேரின் நடுத் தட்டு அண்டமாகிய தேரில் பூவுலகமாகிய தட்டில் இறைவன் எழுந்தருளி ஆன்மாக்களை இரட்சிக்கின்றான்.

அணு தொடக்கம் அண்டங்கள் வரையும் அனைத்தையும் ஊடுருவி நிற்பவன் முருகப் பெருமான் என்பதைக் கண்ணுற்ற சூரபத்மன் தான் கண்ட காட்சியை எண்ணி யெண்ணி விம்மித முறுகின்றான்.

"மாலயன் தனக்கு மேலை
வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்ற மூர்த்தியை"

யான், பாலன் என்றிருந்தேனே என்று கழி விரக்கப்படுகின்றான் சூரபத்மன்.

பஞ்சபூத அண்டகோடிகளெல்லாம், பொதுக்கூட்டம் போலப் பாலசுப்பிரமணியப் பெருமானின் பாதரோமத்தில் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். கண்டதும் ஆயிரத்தெட்டு அண்ட அதிகாரத்தையும் நினைத்து நாணி, அப்பெருமானின் தாடலைப் பட்டான். சேவலும் மயிலும் ஆயினான்.

தமிழதன் மூர்த்தியானாய் தந்ததன் அழகனானாய்
பெருமுதல் ஐயா நீயே பிதற்றியே உந்தன் பக்தர்
வழிபடுந் தெய்வமாக வந்துபள்ளம் புலத்திலுற்ற
ஒருதிரு முருகா உன்னை ஓம்பியே நாமும் நித்தம்
அழுதிடும் விதியுமானோம் ஆற்றிட இல்லை உன்போல்
கருணையின் உருவேதேவே கனன்றிடும் பக்தருள்ளப்
பழுவினைப் போக்கநீயும் பாவையர் இருவர்கூட
அருதிருத் தேரிலேறி எம்அப்பனே மகிழவாடா.

ஆலயங்களும் அறப்பணிகளும்

அன்னை கலாநிதி
செல்வி தங்கம்மா அம்மாக்குட்டி
தெல்லியூர் ஸ்ரீதுர்கா தேவஸ்தானம்

மல்குக வேத வேள்வி
வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும்
பரவுக அறங்கள், இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம்
நான் மறைச் சைவம் ஓங்கிப்
பல்குக உலகம் எல்லாம்
புரனவன் செங்கோல் வாழ்க

(திருவிளையாடற் புராணம்)

சமயம் என்பது மக்களை தூயவாழ்வு வாழத்துணை நிற்பதாகும். வீட்டு நலத்தையும், நாட்டு நலத்தையும் பேணி நிற்பதே சமயவாழ்வின் நோக்கமாகும். ஏழையின் சிரிப்பில் இறைவனை காண் என்றார் ஆன்றோர் இதுவே சமயவாழ்வின் தத்துவம். நாட்டில் இயற்கைச் சீற்றம் கொள்ளா திருக்கவும், வானம் பொய்யாது மழை பொழியவும் அதனால் விளைவு பெருகவும் இதனால் பசியும் பிணியும் நீங்கி நாட்டின் வளம் பெருகவும் ஆலய வழிபாடுகளே வழிகாட்டின என்பது நாயன்மார் வாக்கின் மூலம் அறிய முடி கின்றது.

சமய வாழ்வில் சோழமன்னர் காலம் ஒரு பொற்காலமாகும். இராஜராஜச் சோழன் தனக்கு மண்கோட்டையைக் கட்டிக் கொண்டு மக்கள் ஆன்மீக மையமாக உலகின் பேராலயமான தஞ்சைப் பெருங்கோயிலைக் கருங்கல்லால் கட்டியமை அவன் பெருங் குணத்தின் இலக்கணமன்றோ? இன்று ஆலயங்கள் கல்விக் கூடங்களையும், இயல், இசை நாடகப் பயிற்சிக் கூடங்களாயும், நோய்பிணி நீக்கும் காவலறைகளாயும், தாக சாந்தி நிலையங்களாயும், அன்னதான அமுதசுரபிகளாயும், அநாதைகளின் புகலிடங் களாயும் இயங்கியதை தஞ்சைப் பெருங்கோயில் வரலாறு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

நாயன்மார்கள் தலங்கள் தோறும் சென்று பாடலைப் பாடி மக்களைப் பக்தி நெறியில் வழிநடத்தி நின்றதுடன் சமூகப் பணிகளை முன்னின்று செய்துள்ளனர். திரு மருகலில் பாம்பு தீண்டி இறந்த மணாளனை எழுப்பிப் பெண்ணிற்கு ஞானசம்பந்தப் பெரு மான் மணவிழா காண்பதையும், பாம்பு தீண்டிய அப்பூதியடிகளாரது குழந்தையை அப்பர் சுவாமிகள் எழுந்திருக்கச் செய்தமையும், அந்தணன் வேண்டுதலை ஏற்று, திருவெண் ணெய் நல்லூரில் அந்தணர் வழக்கினை நீதியுடன் தீர்த்துவைத்தமையும், படிக்காசு பெற்று அப்பரும், ஆளுடைப் பிள்ளையும் திருவீழிமிழலைப்பதியில் மழை பெய்யாது பஞ்சத்தால் வாடிய மக்கள் பசி போக்கி நின்றதும், சமூகப்பணிகளே. "எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணியிருக்கவும் நின் தெய்வ அருட் கருணை செய்யாய் பராபரமே..." என ஏங்கியவர் தாயுமான சுவாமிகள். வாடிய பயிர்களைக் கண்டு வாடிநின்றவர் வடலூர் வள்ளலார், இராமலிங்க அடிகள். இறவாத இன்ப அன்பை வேண்டி நின்றவர் காரைக்காலம்மை யார்.

சமூகத்தை நன்னெறியில் நடத்திச் செல்லச் சட்டங்கள் துணைபுரிதல் போன்று சமய நெறிகளும் அவசியமானது. பஞ்சமாபாதகங்களைத் தவிர்த்துச் சமயம் காட்டும்படி வாழும் சமுதாயத்திற்கு நீதிமன்றம் எதற்காக? திருவெண்ணையய் நல்லூரில் பஞ் சாயத்தார் வயோதிப அந்தணரிடம் கோருவது "ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றய லால் தங்கள் சாட்சியில் மூன்றிலொன்றைக் காட்டுவாய்" என்பதேயாகும்.

சேக்கிழார் அவதரித்த குன்றத்துச் சிறப்பைப் பின்வருமாறு பாடுகின்றார். புலவர் ஒருவர்

"சோறுமணக்கும் மடங்களெல்லாம்
தூய்மை மணக்கும் சிந்தையெல்லாம்
சுவர்ண மணக்கும் ஆடையெல்லாம்
தொங்கல் மணக்கும் தோள்களெல்லாம்
சேறுமணக்கும் களனியெல்லாம்
செல்வம் மணக்கும் மடங்களெல்லாம்
தென்றல் மணக்கும் மேடையெல்லாம்
தெய்வம் மணக்கும் செய்யுளெல்லாம்
நீறுமணக்கும் நெற்றியெல்லாம்
நெய்யே மணக்கும் கறிகளெல்லாம்
நெருப்பு மணக்கும் குண்டமெல்லாம்
நெய்மணக்கும் வீதியெல்லாம்

சாது மணக்கும் குன்றத்தூர்
தலைவா தாலோ தாலேலோ
சகலாகம பண்டித தெய்வச்
சைவா தாலே தாலேலோ..."

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" என்கிறார் சாத்தனார். பசிவந்திடப் பத்தும் பறந்திடுமன்றோ. முப்பத்திரண்டு அறத்தையும் பேணுவழி நிற்பது சமய வரலாறன்றோ, சிந்தையே நெறியில் கொண்ட எம்பிரானது நடமாடும் கோயிலுக்குரியது மகேஸ்வர பூசை எனப் போற்றப்படும்.

"அன்னதானம் ஆலயங்களில் பண்டு தொட்டே முக்கிய அறப்பணியாக செயல் படுத்தப்பட்டுள்ளது. திருவீழிமிழலை அன்னதானம் இதற்கு எடுத்துக்காட்டன்றோ. இந்து மதம் தவிர்ந்த மற்றைய மதங்களும் அன்னதானப்பணியை போற்றுகின்றது கடவுள். மதிப்பினைக் கூறும் புத்த மதம் கூட பசிக்கு சோறிடலை போற்றி நிற்கின்றது. சிலப் பதிகாரத்தில் பாரத மடங்களும் பசிப்பிணி அகற்ற என.." அமுதசுரபி பெற்று வாழ்ந்த மணி மேகலை வாழ்வின் மூலம் அறிகின்றோம். வைன மதம் "தாயா மூலதன்மம்" என இத் தர்மத்தை ஆதரித்து நிற்கின்றது. வைணவ ஆழ்வார்களில் ஒருவரான திருமங்கை மன்னன் தினமும் ஆயிரம்பேருக்கு அன்னதானம் வழங்கி வறுமையுற்றான் என்பது வர லாறாகும். என்வே சமயங்களின் உயிர்கொள்கையின் ஒன்றான தாகசாந்தி யும் சோறிடும் தர்மமும் என்றும் நிலைபெற வேண்டும்.

ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப் பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின் வள்ளுவர். – திருக்குறள்

முதன்முதல் கருங்கல் கோவிலைக் கட்டியவன் சோழமன்னன் கோச்செங்களான் ஆலயங்கள் கல்விக் கூடங்களாகவும், கலைவளர்ச்சியின் வளங்களாகவும், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மையால் சங்கர்ப்ப எனக் கண்டு தலைமைப்புலவனாய் மதுரை யில் சோமசுந்தரரே ஏற்றுகின்றதும். தமிழுக்கு தமிழ் சகாக்களாய் பொற்கிழி பெற்றதும் கோயில் வரலாறன்றோ. மாமல்லபுர கற்றழிக்கலைக் கோயில்களும் இதற்கு சான்று பகர்வதன்றோ. நடராஜர் பரதக் கலைமய காட்டி நிற்பதும் சிதம்பரத்திலன்றோ.

கோயில் இல்லா ஊரிற் குடியிருக்கமாட்டார்கள் நம்மவர். அந்தணர் வேத வொலி களும், பாவணார் பதிக வொலிகளும், ஆலய மணியோசையும், சங்கொலியும், "செவிக் குணவில்லாத போது சற்று வயிற்றிற்கு ஈயப்படும்" என்ற செவியின்பத்தை பூர்த்தி செய்து நிற்கின்றது. வேள்விகளிலும் யாகங்களிலுமிருந்து வரும் நறுமணப் புகைகள் மக்களின்

மனங்களையும் சுவாசக்காற்றையும் தூய்மைப்படுத்தி நிற்பதைப் பார்க்கின்றோம். தீபாராதனையும் மன இருளை அகற்றி நிற்கின்றது. ஆலய கட்டிட அமைப்புக்கள் கலை உணர்வைத் தாண்டி நிற்கின்றது. ஆலயங்கள் எல்லாம் அடியார்களின் பக்தியை தூண் டும் அறவொழுக்கத்தை பரப்பி நிற்றல் அவசியமன்றோ.

எனவே தான் ஆலயங்கள் எல்லாம் அற னெறி பரப்பும் நிறுவனங்களாக அமைய வேண் டும் என்று பலரும் விரும்புகின்றனர். சமயம் வேறு சமூகம் வேறு என்று பிரித்து நோக்காது சமய வாழ்வே சீரான சமூகவாழ்வுக்கு உதவ வேண்டும். பண்டு பார் போற்ற விளங்கிய எத்தனையோ குமலை நாகரீகம் மண்மணந்து போனபோதும் இந்து சமயத் தோடு ஒன்றி நின்ற இந்து வழி நாகரீகம் இன்னும் பெருமை பெற்று விளங்குகின்றது. இதற்கு காரணம் தெய்வ அம்சம் எமது இந்து நாகரீகத்தடன் இணைந்திருந்தமையாகும். வடநாட்டில் இராமகிருஷ்ண ஆச்சிரமம், சிவானந்த ஆச்சிரமம் தென்னாட்டில், ஞானா னந்த தபோவனம் பெங்களூர் சிட்டப்பத்தி போன்றவை ஆலயப்பணிகளுடன் அறப்பணி களையும் சிறப்பாய் செய்து ஏழையின் சிரிப்பில் இன்பம் காண்கின்றது.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க..."

நல்லூர் பரியும்பூட்டி நயந்திடத் திருத்தேர் தன்னை
வள்ளலே உந்தன்வீட்டு வாயிலின் முன்னர் விட்டு
நல்லரும் மாதர்கூட நயந்திடும் முருகா உன்னை
செல்லமாய் அழைத்துவந்து எம்செல்வமே தேரிலேற்றி
பல்திசை அடியர்வந்து பற்றினால் உன்னைஎண்ணி
ஐயனே அசைவாய் எங்கள் ஆனதாம் கொடுமைதீய
வல்லவா என்றேயந்த வடமதைப் பற்றிமீட்டக்
கள்ளனே பள்ளம்புலத்து கந்தனே ஆடிவாடா.

பதி

சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர்
செ.கந்தசுத்தியதாசன்
B.A..(Hons.)Dip in.Edu.(Jaf.)

சைவசித்தாந்தம் என்றால் சைவ தத்து வத்தின் முடிந்த முடிவு எனப்படும். கி.பி 13ம் 14ம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்ற சிவஞான போதம், சிவஞானசித்தியார், சிவப் பிரகாசம், திருவருட்பயன் போன்ற 14 சைவசித்தாந்த சாஸ்திர நூல்களினூடாகவே சைவ சித்தாந்த கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்க காண்கின்றோம். மெய்கண்ட தேவரை முதலாகக் கொண்ட புறச் சந்தானச் சாரியார்ராலும், பிற சிலராலும் சுருதி, யுக்தி அனுபவம் எனும் அளவைகளைக் கொண்டு பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்களையும் ஆய்வு செய்திருக்கின்றார்கள்.

அறிவிக்காமலே அறியவல்லது பதி என்றும், அறிவித்தால் அறிவது பசு என்றும் அறிவித்தாலும் அறியமாட்டாது பாசம் என்றும் அழைக்கப்படும் ஆதிசங்கரரைப் போல் அல்லாமல் சைவசித்தாந்தம் முப்பொருளையும் உண்மைப்படுத்தி கருத்துக் கூறி இருக் கின்றது. இவற்றில் பதி பற்றிய கருத்துக்களை சுருக்கமாக நோக்குவோம்.

பதியாகிய தலைவன் சிவன் ஆவான். இப் பதியை நித்தியத்தன்மை, சர்வ வியாபகத் தன்மை, இலட்சியம், இலக்கணம் எனும் தலைப்புக்களில் நோக்குவோமாயின் பதி பற்றிய கருத்துக்களை தெளிவாக விளங்கிக் கொள்ளலாம்.

சைவசித்தாந்திகளின் கருத்துப்படி பதியாகிய தலைவன் என்றுமே உள்ளது. அனாதி யானது தோற்றமோ, முடிவோ இல்லாதது, அழிவில்லாதது என்ற கருத்தை உமாபதி சிவாச்சாரியார் பின்வரும் திருவருட்பயனூடாக தெளிவுபடுத்துகின்றார். ஏகனாகிய பதி அனேகனாகிய பசுக்கள் இருளாகிய ஆணவமலம் கரும மாகிய கன்ம மலம் மாயை யாகிய சுத்த மாயை, அசுத்தமாயை ஆகிய இவை ஆறும் அனாதியானவை என உமாபதி சிவாச்சாரியார் கூறுகின்றார்.

"ஏகன் அநேகன் இருள் கரும மாயை இரண்
டாக இவை ஆறாதியில்"

திருவருட்பயன்

பதியாகிய சிவனை உலகத்தின் தோற்றக் காரணியாகக் கொண்டு பானையை கண்ட ஒருவன் அப்பானையை செய்தவன் ஒருவன் இருக்க வேண்டும் என சிந்திப்பான். அதே போல் இப்பிரபஞ்சத்தினை காணும்போது இதைப் படைத்தவன் ஒருவன் இருக்க வேண்டும் என்ற சிந்தனை தோன்றுகின்றதல்லவா? இதையே சிவஞானபோதம் முதற் சூத்திரம் கூறுகின்றது. அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் சுட்டப்படும் இவ்வுலக மானது ஒருநாள் தோன்றி சற்றுக்காலம் இயங்கி மீண்டும் ஒருநாள் ஒடுங்கின்றது. எனவே இதைத் தோற்றி இயக்கி ஒடுக்கிக்கொள்ள இதற்கு அப்பாற்பட்ட ஒருவன் தேவையே அவனே ஆதியும் அந்தமும் இல்லாத சிவன் என சிவஞான போத முதற்சூத்திரம் கூறு கின்றது.

"அவன் அவள் அது எனும் அவை மூவினைமையிற்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தமாதி எண்மனார் புலவர்"

இக்கருத்தையே சித்தியாரின் முதற்சூத்திர முதல் விருத்தப்பாவும் தெளிவுபடுத்துகின்றது.

ஒருவனோடு ஒருத்தி ஒன்றென்று உரைத்திடும் உலகமெல்லாம்
வருமுறை வந்துநின்று போவதும் ஆதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும் தாம் முதல் ஈறுமாகி
மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே

மண்ணை முதற்காரணியாகவும் திரிகையை துணைக்காரணியாகவும் குயவன் நிமித்த காரணனாகவும் நின்று பானையைச் செய்வது போல மாயையை முதற்காரணமாகக் கொண்டு திரோதான சக்தியை துணைக்காரணியாகக் கொண்டு தான் நிமித்த காரண னாகி தனு, கரண, புவன, போகத்தினை படைக்கின்றான்.

இது மட்டுமன்றி தொழிற்பாட்டுக் காரணியாகவும் பதியை நித்தியப்படுத்தும் போது குடைச் சீலை, கம்பி, பிடி, நூல் என்பன ஒன்றாக இருந்து விட்டால் குடைவர மாட்டாது. அதைச் சேர்த்துக் கட்டுவதற்கு ஒருவன் தேவையல்லவா. அதேபோல் பஞ்ச பூதங்களை யும் தொழிற்படுத்தி இப் பிரபஞ்சத்தை இயக்குவதற்கு இறைவன் தேவை. எனவே பதி என்றும் உள்ளது.

கன்மம், சடம் அது செய்வதனைத் தானாகச் சென்றடையமாட்டது. எனவே கன்மத்தை அதைச் செய்த பசுக்களோடு சேர்த்துவைக்க ஒருவன் வேண்டும் எனக் குறிப்பிட்டு கன்மங் களையும் சேர்ப்பவனாகவும் பதியை நித்தியப்படுத்துகின்றார்கள். இதனையே சைவ சித்தாந்திகள் திருவருட் பயனில்

செய்வானும் செய்வினையும் சேர்ப்பயனும் சேர்ப்பவனும்
உய்வான் உளன் என்று உணர் – என்கிறார் உமாபதிசிவம்

இந்தப் பிரபஞ்சத்தில் எப்பொருளைப் பார்த்தாலும் பூரணமில்லை. என்றே கூறு கின்றோம். பூரணமான ஒரு பொருள் இருப்பதாலேயே இவற்றைப் பூரணமில்லை என் கின்றோம். அப்பூரணமான பொருளே பதி என்று பதியை நித்தியப்படுத்துகின்றார்கள். மேலும் இப்பிரபஞ்சத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் அறிவு குறைந்தது பூரண அறிவு இல்லாமலே காண்கின்றோம். முற்றறிவுடைய ஒருவன் இருப்பதனால் தான் இவற்றை அறிவுகுறைந்தன என்கின்றோம். அவ்வாறு முறற்றிவுடையவன் யாரெனில் அவனே பதியென சைவசித்தாந்தம் பதியை உண்மைப்படுத்துகின்றது.

இவ்வாறு பதி உலகத்தின் தோற்றக் காரணி, தொழிற்பாட்டுக்காரணி மட்டுமன்றி ஆன்மாக்களுடன் கன்மத்தை இணைப்பவர் என்றும் பூரணமானவர். முற்றறிவுடையவர் என்றும் பதியை உண்மைப்படுத்தி இருக்கின்றார்கள்.

அடுத்து பதியின் சர்வவியாபகம் பற்றி நோக்கும்போது பதியாகிய சிவன் இப் பிர பஞ்சம் எங்கணுமே கண்ணக்குத் தெரியாது மறைந்து காணப்படுகின்றான். எவ்வா றெனில் "அ" என்ற உயிரெழுத்தானது எல்லா எழுத்துக்களும் முதலாக அமைவதோடு எந்த எழுத்தை உச்சரிப்பினும் "அ" என்ற எழுத்தை உச்சரித்த பின்னரே மற்றைய எழுத்துக்களை உச் சரிப்பது போலவும் "அ" என்ற உயிரெழுத்து மற்றைய எழுத்துக்களுள் மறைந்தும் (க்+அ=க, ச்+அ=ச) காணப்படுவது போலாகும். இக்கருத்தையே உமாபதி சிவாச்சாரியார்

"அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து"

என திருவருட்பயனில் முதலாம் குறட்பாவினாலேயே குறிப்பிடுகின்றார். இக் கருத்தை சிவஞான சித்தியாரும் "அக்கரங்கள் தோறும் சென்றிடும் இறைவன்..." என்கிறது.

மேலும் சுடுநீரில் கூடானது எங்கும் பரந்தும், செறிந்தும், மறைந்தும் வியாபித் திருப்பது போல பதியும் அவ் உலகப் பொருட்கள் அனைத்திலும் பரந்தும், செறிந்தும்,

மறைந்தும் வியாபித்திருக்கின்றான் என்கிறார்.

"எங்கும் எவையும் எரியுறு நீர்போல் ஏகம்
தங்கும் அவன் தானே தனி"

இவ்வகையில் பதியின் இலக்கணம் பற்றி நோக்கும் போது சொரூபநிலை, தடத்தநிலை என்ற இரு நிலைகளை கூறி உள்ளார்கள். அதாவது குணங்குறிகளை கடந்து உருவம் நாமம் அற்று ஞானிகளுக்கும் இருடிகளுக்கும் மட்டும் புலனாகும் வண்ணம் இருக்கும் நிலையே சொரூப நிலையாகும் இந்த நிலையை சிவப்பிரகாசம்,

"குணமிலான் குணங்குறியிலான் குறைவிலான் குலமிலான் தனக்கென
ஒரு பற்றிலான் மைந்த மனைவியிலான் ஏவலாளன்..." எனவும்

சிவஞான சித்தியாரில்

"பதி பரமே யது தான் நிலவும் அருவுருவன்றிக் குணங்குறிகளின்றி
நின் மலமாய் ஏகமாய் நித்தமாகி..." என்றும்

"ஊரிலன் பேரிலன் குணங் குறியிலன் போக்குவரத்திலன்
இன்னிறத்தன் இப்படியன் இவ்வண்ணத்தன் இவனிறைவன்
எனக்காட்டவொண்ண..." என்றும் குறிப்பிடுகிறார்கள்.

இப்பதிக்கு சிறந்த ஓர் இலட்சியமுண்டு. என்னவெனில் ஆன்மாக்கள் மீதுகொண்ட பெருங்கருணையினால் பசுக்கள் பாசங் களின் பிடியிலிருந்து விடுபட்டு பிறப்பிறப்பு அற்ற பேரின்ப நிலையாகிய முத்தியைப் பெற வேண்டும் என்பதாகும். இதற்காக சொரூப நிலையிலுள்ள பதியாகிய சிவன் தன்னை ஒருபடிகீழே இறக்கிக் கொண்டு வருதலே தடத்த நிலையாகும். இத்தடத்த நிலையில் சிவன் உருவம், நாமம், குணம், குறி, தொழில்களுடன் இருப்பான். சாதாரண பாமர மக்களும் வழிபட்டு உறுதி பெறும் நிலையும் இதுவாகும். இத்தடத்த நிலையில் அருவம், அருவுருவம், உருவம் எனும் பல்வேறு வடிவங்களை பதி கொள்ளுவான். இதனையே திருவருட்பயனில் உமாபதி சிவாச்சாரியார் பின்வருமாறு கூறுகின்றார்.

"அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்
உருவு முடையான் உளன்"

அருவம் – சிவம், சக்தி, நாதம், விந்து என்பனவாகும். அருவுருவம் – சிவலிங்கமாகிய சதாசிவத்திருமேனி உருவம் – பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் எனும் நான்கு

மாகும். இவை அனைத்தையும் நவந்தருபேதம் என்பர். இவற்றில் சக்தி, விந்து எனும் இரண்டும் சக்திபேதம் ஏனைய ஏழும் சிவபேதமாகும்.

சிவபெருமானின் மூர்த்தி பேதங்கள் அறுபத்தி நான்கினுள் முதலில் கூறப்படுவது இலிங்கம் இதையடுத்துக் கூறப்பட்ட மூர்த்திகள், இலிங்கோற்பவர், முகலிங்கம், சதா சிவம், மகாசதசிவம், உமாமகேஸ்வரர், சுகாசனமூர்த்தி, உமேசமூர்த்தி, சோமாஸ்கந் த மூர்த்தி, சந்திரசேகர மூர்த்தி, விருசாருடமூர்த்தி, விருஷாந்திகமூர்த்தி, புஜங்கலளித மூர்த்தி, புஜங்கத்ராஷ மூர்த்தி, சந்நிதியாநிருத்த மூர்த்தி, சதாநிருத்தமூர்த்தி, சண்ட தாண்டவ மூர்த்தி, கங்காதரமூர்த்தி, கங்கா விஷர்யணமூர்த்தி, திரிபுராந்தகமூர்த்தி, கல்யாண சுந்தரமூர்த்தி, அர்த்தநாரீ சுரமூர்த்தி, கஜாசுர சம்ஹாரமூர்த்தி, ஜவராபக்ன மூர்த்தி, சார்தூல ஹரமூர்த்தி, பாசுபதமூர்த்தி, கங்காளமூர்த்தி, கேசவ மூர்த்தி, பிசஷ் ஷாடன மூர்த்தி, சிம்ஹக்ன மூர்த்தி, சண்டேஸ்வர அனுக்கிரகமூர்த்தி, வியாக் கியான தகஷிணாமூர்த்தி, யோக தெட்ஷிணா மூர்த்தி, வீணாதஷிணா மூர்த்தி, காலாந்தக மூர்த்தி, காமாரிகால தகனமூர்த்தி, வகுலேஸ்வர மூர்த்தி, வைரவமூர்த்தி, ஆபதுத் தாரணமூர்த்தி, வடுகமூர்த்தி, ஷேத்திரபால மூர்த்தி, வீரபத்திரமூர்த்தி, அகோராஜதிரமூர்த்தி, தசஷாயஞ் யஹர மூர்த்தி, கிராதமூர்த்தி, குருமூர்த்தி, அஸ்வாரூடமூர்த்தி, கஜாந்திகமூர்த்தி, ஜலந்திர வதமூர்த்தி, ஏகபாத திரிமூர்த்தி, ரிரிபாதத்ரிமூர்த்தி, ஏகபாத மூர்த்தி, கௌரிபரப்ரதமூர்த்தி, சக்ரதாளஜ் வரூபமூர்த்தி, கௌரீ லீலாசமன்வித மூர்த்தி, விஷாபகரணமூர்த்தி, கரு டாந்திக மூர்த்தி, பிரம்மசிரசேதகதமூர்த்தி, கூர்மசம்ஹாரமூர்த்தி, மத்ஸ்யாரிவராஹாரி, பிரார்த்தனாமூர்த்தி, ரத்தபிக்ஷா பிரதானமூர்த்தி, சிஷ்யபாபமூர்த்தி ஆகிய அறுபத்து மூன்றுமாம் இவற்றுள் இலிங்கம், இலிங்கோற்பவர், சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், பைரவர், வீரபத்திரர், நிருத்த மூர்த்தி, தஷிணாமூர்த்தி, பிசஷாட மூர்த்தி ஆகிய ஒன்பது மூர்த்திகள் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள பெரும்பாலான கோயில்களில் வழிபாட்டிற்காக நிறுவப்பட்டிருக்கக் காண்கின்றோம்.

இவற்றை அஹோர வடிவம் உ-ம் அட்டவீரட்ட வடிவங்கள் என்றும் காலாந்தகர், திரிபுராந்தகர், வைரவர், வீரபத்திரர் போன்றும் கோரவடிவம் உ-ம் அம்மையப்பனாக நிற்றல், நடராஜர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் என்றும் யோகவடிவம் தட்ஷிணாமூர்த்தி, ஏகபாதர் என்றும் வகைப்படுத்தலாம். இவ்வாறு பல வடிவங்களுக்கும் பல நாமங்கள் காணப்படுகின்றது. உ-மாக நீலகண்டர், காலாந்தகர், இடபாருடர், லிங்கோற்பவர், அர்த்த நாரீஸ்வரர், சங்கரநாராயணர், நடராஜர், வீரபத்திரர், வைரவர் போன்றவற்றைக் குறிப்பிட லாம்.

தடத்தநிலையில் பசுக்களின் நன் மையின் பொருட்டு படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் (பஞ்சகிருத்தியம்) ஐந்தொழிலை மேற்கொள்கின்றார். இதனை உணர்த்தும் வடிவமாக நடராஜரின் ஆனந்த தாண்டவம் காணப்படுகின்றது. இத்தத்துவத்தை உண்மை விளக்கத்தில் திருவதிகை, மனவாசமீ, கடந்த தேவர் பின்வரு மாறு குறிப் பிடுவர்.

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோதம் முத்தி
ஞான்ற மலர்ப்பதத்தே நாடு"

படைத்தல்	–	சிருஷ்டி	–	உடுக்கேந்தியகை
காத்தல்	–	திதி	–	அபயகரம் (வலதுகை)
அழித்தல்	–	சங்காரம்	–	அக்கினி ஏந்திய கை
மறைத்தல்	–	திரோபவம்	–	ஊன்றிய திருவடி (முயலகன்)
அருளல்	–	அனுக்கிரகம்	–	தூக்கிய திருவடி (குஞ்சிதபாதம்)

தொழில்கள் மட்டுமன்றி இத்தடத்த நிலையில் பதிக்கு எட்டுக் குணங்களும் உடைய வனாக காணப்படுகின்றது. அதாவது தன் வயத்தனாதல், தூயஉடம்பினனாதல், முற்று முணர்தல், இயல்பாக பாசங்களில் நின்று நீங்குதல், இயற்கை உணர்வினனாதல், பேராற்றலுடைமை, பேரறிவுடைமை, பேரருளுடமை என்பனவாகும்.

இப்பதியானது ஒருவனாக இருந்தாலும் பலவாக காணப்படுவான் இக் கருத்தை திருவுந்தியார்.

"ஏகனுமாகி அனேகனுமாகி நாதனுமானான் என்று உந்தீபற...."

மேலும் இச்சிவன் பசுக்களின் நன்மைக்காக தன்னோடு ஆற்றலுடைய சக்தியை பழமும் சுவையும் போல பின்னிப் பிணைந்து வைத்திருக்கின்றான். இதையே

"தன்னிமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்" என்றும்

சிவஞானசித்தியார் சிவன் எவ்வழியோ சக்தியும் அவ்வழியாகவே நின்று அனுக்கிரகம் செய்வாள் என்பதை "எத்திறம் நின் றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்...." என்கிறது. இவ்வாறு சிவமும் சக்தியாக நின்றாலும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் ஆக நின்றாலும் சிவன் ஒருவனே என்ற கருத்தையும் மிகவும் தெளிவுபடுத்தி இருக்க

காண்கின்றோம். இவ்வாறு ஒருவனாக இருப்பதனாலேயே சிவன் தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவன் பெருந்தகையாய் விநாயகனாய் இருக்கின்றான் என்பதை

"பல்லால் உயிர் உணரும் பார்வை என மேலாருவன்
இல்லாதான் எங்கள் இறை"

என திருவருட்பயனில் பதிமுதுநிலை அதிகாரத்தில் உமாபதி சிவாச்சாரியார் குறிப்பிடுகிறார்.

இப்பதியானது நல்லவனுக்கு நல்லவனாகவும், எளியவனாகவும், தீயவர்களுக்கும் தன்னை அணுகாதவர்களுக்கும் அரியவனாகவும் உள்ளான். விருப்பு வெறுப்பின்றி சர்வ ஆன்மாக்களுக்கும் சுகம் செய்பவனாகவும் உள்ளான் என்பதைப் பின்வரும் திருவருட் பயன் தெளிவுபடுத்தி நிற்கின்றது.

"நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்
சலமிலன் பேர் சங்கரன்"

இப்பதியானவன் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் உடைய சகலரின் முன்னே நேரேவராது ஒரு குருவின் உடம்பினை ஆதாரமாகக் கொண்டு அவ் வுருவாகவே வந்து அனுக்கிரகம் செய்வான் எவ்வாறெனில் பழக்கப்பட்ட விலங்குகளை கொண்டு அதாவது விலங்குகளின் தோலை மனிதன் போர்த்தி நின்று ஏனைய விலங்கு களைப் பிடிப்பது போலே ஆகும். இக்கருத்தை பின்வரும் திருவருட்பயன் கூறுகின்றது.

"பார்வை என மாக்களை முன் பற்றி பிடித்தற்காம்
போர்வை எனக் காணார் புவி"



தேர்த் திருவிழாவும் அதன் உட்பொருளும்

புலவர் ஏழு
திரு.கு.ரா.முருகேஸ், M.A.,M.O.L,
ஆசிரியர், திருக்கோயில், சென்னை-43

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள், பலவகைத் தத்துவ நுட்பங்களை உள்ளுறையாகக் கொண்டவை. சிவாலயங்களில் நடைபெறும் தேர்த்திருவிழா, சிவ பெருமான் திரிபுர தகனம் செய்தருளிய நிகழ்ச்சியைப் புலப்படுத்துவது.

திரிபுர தகனம் :

ஒரு காலத்தில் தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூன்று கொடிய அசுரர்கள் இருந்தனர். அவர்கள் இரும்பு, வெள்ளி, பொன் என்னும் உலோகங்களால் அமைந்த பறக்கும் தன்மை வாய்ந்த மூன்று கோட்டைகளை உடையவர்களாய், தேவர் களுக்கும் முனிவர்களுக்கும் பெருந் தீங்குகளைப் புரிந்து வந்தனர். ஆதலின் அவர்களை அழித்தருளச் சிவபெருமான் திருவுள்ளம் கொண்டார். அதனால் பூமியைத் தேராகவும் சூரிய சந்திரர்களை சக்கரமாகவும், விண்மீன்களை விதானமாகவும், மேரு மலையை வில்லா கவும், வாசுகியை நாணாகவும், நான்கு வேதங்களைக் குதிரையாகவும், பிரமதேவ னைச் சாரதியாகவும் கொண்டு தேவர்கள் பலரும் தேரின் உறுப்புக்களாக அமைய, அதன் மீது ஏறிப் போருக்குப் புறப்பட்டார்.

இந்நிலையில் தேவர்கள் பலரும் தம்முடைய துணையினாலேயே, சிவபிரான் திரிபுர அசுரர்களை வெற்றி கொள்ளப் போகின்றார் என்று எண்ணிச் செருக்குற்றனர். அதனை யறிந்த சிவபிரான், அவர்களின் அறியாமையை நினைந்து தாம்புரிந்த புன்னகையி லேயே, திரிபுர அசுரர்களை எரித்து அழித்தார் என்பது வரலாறு. இவ்வரலாறு யசுர் வேதம், இலிங்கபுராணம், ஸ்கந்த புராணம், மகாபாரதம், வால்மீகி இராமாயணம் முதலிய பழம்பெரும் நூல்களில், ஆங்காங்கே பரக்கக் கூறப்பட்டிருக்கின்றது.

"அப்பணி செஞ்சடை யாதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்

முப்புரம் ஆவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை ஆர்அறி வாரே"

எனத் திருமூலர் தாம் அருளிச் செய்த திருமந்திரத்தில், சிவபிரான் திரிபுரதகனம் செய்த வரலாற்றின் தத்துவ நுட்பத்தை விளக்கி இருப்பதைக் காணலாம். இனி இவ்வாறேயன்றி வேறு வகையிலும், தேர்த் திருவிழாவின் தத்துவத்தைப் பெரியோர்கள் விளக்குவர்.

உடலும் உறையும் :

ஆன்மாக்களுக்கு காரண சரீரம் கஞ் சுக சரீரம், குணசரீரம், சூக்கும சரீரம், தூலசரீரம் என்னும் ஐந்து சரீரங்கள் உண்டு. இவற்றிற்கு முறையே ஆனந்தமயகோசம், விஞ்ஞான மய கோசம், மனோமயகோசம், பிராணமய்யகோசம், அன்னமயகோசம் எனவும் பெயர்கள் வழங்கும். சரீரம் – உடல், கோசம் – உறை.

அசுத்த மாயா தத்துவம் ஏனைத் தத்துவங்களுக்கும், சரீரங்களுக்கும் காரண மாக இருத்தலால், அதனால் உண்டாகிய சரீரம் காரண சரீரம் என்றும், அச்சரீரம் பெற்ற அளவில் கேவலத்தில் ஒன்றுமின்றி நின்றஆன்மாவுக்கு அறிவு இச்சை செயல்கள் பொது வகையில் விளக்கமுற, அவ்வளவில் அம் மயக்க அறிவால் ஓர் ஆனந்த உணர்ச்சி நிகழ் தலின், அஃது ஆனந்த மயகோசம் என்றும் பெயர் பெறும்.

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் ஐந்து தத்துவங்களும், ஆன்மா வுக்கு ஐந்து சட்டைகளைப் போன்று இருத்தலால், அவற்றால் உண்டாகிய சரீரம் கஞ்சுக சரீரம் என்றும், அச்சரீரத்தால் ஆன்மாவின் அறிவு இச்சை செயல்கள் சிறப்பு வகையால் விளக்க முற்று விடயபோகங்களை அறியும் இயல்பும். ஆற்றலும் பெறுமாதலின், அவ்விசேட அறிவை உண்டாக்கும் சரீரம், விஞ்ஞானமயகோசம் என்றும் பெயர் பெறும்.

சாத்தவிகம், இராசதம், தாமதம் என்னும் முக்குணங்களாகிய சரீரம் குணசரீரம் என்றும், அம்முக்குணங்கள் மனம் முதலிய அந்தக் கரணங்களைத் தம்முள் அடக்கி நிற்றலின், அது மனோமயகோசம் என்றும் வழங்கப்பெறும்.

சூக்கும பூதங்களாகிய தன் மாத்திரைகளால் அமைந்த சரீரம் நுண்ணிய அணுக் களால் அமைந்த சரீரம் நுண்ணிய அணு வடிவினதாய் நிற்றலின், சூக்கும சரீரம் என்றும், அச்சூக்கும சரீரம் பிராணன் என் னும் வாயுவோடு நிற்றலாலும், தான் நீங்கும் காலத்தும் அப்பிராணவாயுவோடு கூடியே நீக்குதலாலும், பிராணமயகோசம் என்றும் சொல்லப் படும்.

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் தூல பூதங்களால் உண்டாகிய சரீரம் தூலசரீரம் என்றும், அவை உண வால் வளர்க்கப்படுதலின், அன்னமய கோசம் என்றும் கூறப்படும். ஆன்மாவானது இந்த ஐந்து கோசங்களின் வேறாயும், அவற்றோடு சேர்ந்து அதுவதுவா கவும், நின்று அவற்றைச் செலுத்தும்.

ஆனந்தமயகோசம், விஞ்ஞானமய கோசம், மனோமயகோசம், பிராணமயகோசம், அன்னமய கோசம் என்னும் ஐந்தம், மாயையினின்று ஒன்றுக்கொன்று தூலமாய்த் தோன்றுவனவாகும். ஆனந்தமய விஞ்ஞானமய கோசங்கள் மிகவும் மென்மை யானவை. ஆதலின், அவைகள் தோற்பாவையைப் போலும்! மனோமய, பிராணமய கோசங்கள் முன்னைய இரண்டிலும் சிறிது வன்மையுடையவை. ஆதலின், அவைகள் மரப்பாவையை ஒக்கும்! அன்னமய கோசமாகிய தூலசரீரம் மிகவும் பருமை வடிவ முடையதாதலின், ஏனைய நான்கிலும் பருமையும் வலிமையும் பெற்றிருக்கும். ஆதலின் அதற்குத் தேர் உவமையாகக் கூறப்படும்.

மேற்கூறிய ஐந்து கோசங்களையும், ஆன்மாவானது வேறாயும், ஒன்றாயும் கலந்து நின்று இயக்குவிக்கும். நடிகன் ஒருவன் பலவைக் கோலங்களையும், வேடங்களையும் மேற்கொண்டு, அவ்வவற்றின் வண்ணமாய் நின்று நடிக்கின்ற தன்மைபோல், ஆன் மாவும் இவ்வைந்து கோசங்களில் வயப்பட்டு நின்று, இயங்கி நிற்கும். இத்தகையதொரு பெரும் தத்துவ நுட்பத்தையே, திருக்கோயில்களில் நடைபெறும் தேர்த் திருவிழாக்கள், எளிய பாமர மக்களும் இனிது உணர்ந்துகொள்ளும் வண்ணம், உருவக முறையில் கட்புலனாக் கிக் காட்டி விளக்குகின்றன.

ஞானாமிர்தம் :

சைவசித்தாந்த நூல்களுள் பழமையும், பெருமையும் வாய்ந்த ஞானாமிர்தம் என்னும் சிறந்த நூல், இக்கருத்தை தனது பாடல் ஒன்றில், விரிவாக முற்றுருவம் செய்து விளக்கியிருக்கின்றது. சிவஞான போதம் ஆன்மாவை, அமைச்சரோடு கூடிய அரசன் என உருவகம் செய்தது. சிவஞானசித்தியார் அதனையே படை கொடு பவனிபோதும் பார் மன்னன் என்னும் தொடரில், மேலும் சிறிது விரிந்துரைத்தது. அதனையே தொடர்ந்து பின்பற்றி, முற்றுருவகமாக்கி முடித்துக் காட்டி விளக்குகின்றது. ஞானாமிர்தம்! உடல் ஆகிய தேரில், உயிர் ஆகிய அரசன், உலகம் ஆகிய மாடவீதியில், உலாவருதலை அழகுற உருவகம் செய்து, ஞானாமிர்தம் பின்வருமாறு

உடல்தேரில் உயிரின் உலா

ஆன்மா அரசன், உடல் அரண்மனை, புருவநடு திருவோக்கல மண்டபம், கண்டம் நாடக அரங்கு. இருதயம் மந்திராலோ சனை மண்டபம் உந்தி அந்தப்புரம். மூலா தாரம் பள்ளியறைக் கட்டில் இவ்விடங்களில் முறையே நனவு, கனவு உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் (சாக்கிரம் சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்) என்னும் ஐந்து அவத்தைகள் நிகழும் இந்நிலையில் முறையே 35, 25, 3, 2, 1 எனக் கருவிகள் தொழிற்படும். மனம், புத்தி, சித்தம், அகங் காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான் காகும், அமைச்சர்கள், காலம், நியதி, கலை, வித்தை அராகம் என்பன கனம் நிலம், நீர், தீ, கால், செவி என்னும் ஐம் பெரும் பூதங்களும் தேர், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் அறிகருவிகள் ஐந்தம் முறையே ஒற்றர், சூதமாகதர், தூதுவர், புரோகிதர், மெய்க்காப்பாளர், நாக்கு, கால், கை எருவாய், கருவாய் (வாக்கு, வாதம், பாணி, பாயுரு, உபத்தம்) என்னும் தொழிற் கருவிகள் ஐந்தம், முறையே குதிரைவீரர், யானைவீரர், தேர் வீரர், காலாட்கள், படைத்தலைவர் அறி கருவிகளுக்கு நுகர் பொருளாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன அகப்பரிவாரம். தொழிற்கருவிகளுக்கு நுகர் பொருளாகிய உரை, நடை, கொடை, போக்கு, இன்பம் (வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்) என்பன புறப்பரிவாரம், பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் பத்துவகைவாயுக்கள் ஆகிய பரிவாரங்களுடன், ஆன்மாவானது உடலாகிய தேரை ஊர்ந்து நின்று, உலகமாகிய மாடவீதிகளில் உழன்று திரிந்து வருகின் றது. இதனை ஞானாமிர்தம் என்னும் சைவ சித்தாந்த ஞானநூல், பின்வருமாறு விரிவாக விளக்கிக் கூறு கின்றது.

கால்கொடுத்து இருளை மூட்டி வாழிய
வெந்நில் தண்டென்விடங்கத்து இன்னியற்
பழுங்கழி நிரைத்துச் சிரைக்கயிறு அசைத்து
மயிர்த்தோல் வேய்ந்து சுவர்த்தசை நிறீஇ
ஐம்புலச் சாளரத்து அரும்பெறல் மாடத்து
உம்பர் மணிக்குடச் சென்னி பொங்கிய
கூந்தற் பதாகை நான்குநிலை தழீஇயிய
ஆங்கினிது அமர்திறன் அறையின் ஆன்ற
சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம்
பிருகுடி நாப்பாண் ஒருபெருங் கந்தரம்
மருமத்து ஆதி வலஞ்சுழி உந்தி
உறும்நான்னு அங்குலி உம்பர் வரன்முறை

செவிமெய் கண்வாய் மூக்குஎனப் பெயரிய
வாயில் மிலெச்சர் சாரணர் தூதர்
சூதர் மாகதர் புரோகிதர் என்ற
மேதகு புத்திஇந் திரியமும் தீதறு
வாக்கொடு பதம்பகை பாயு உபத்தம்என்
இவுளி மறவரும் யானை வீரரும்
திகிரி தூண்டிய தறுக ணாளரும்
வன்கண் மள்ளரும் தந்திரத் தலைவரும்
என்கரு மேந்திரியத் திறனும்,
எஞ்சிய ஓசை கூட்டம் உருவம் இரதம்
கந்தம் உரைநடை கொடைபோக்கு இன்பம்என்
விடயப் பல்பரி சனமும், மிடையாப்
பிராணன் அபானன் உதானன் வியானன்.
சமானன் நாகன் கூர்மன் கிருகரன்
தேவ தத்தன் தனஞ்சயன் என்ற
ஈரைந்து உறுதிச் சுற்றமும், நீதி
சிந்தித்து ஆய்ந்து துணிந்து செயற்படும்
அந்தக் கரண அமைச்சரும், தந்தம்
முறையுளி வழாது தறைதோறு ஈண்டிச்
சாதுரங் கத்து நீதி யாகிப்
பேரத் தாணி சீர்பெறத் துன்னி
வீசுப வீசி, விரும்புவ வரம்பி,
மாசில் காட்சி மன்னன் நீங்கிப்
பல்பரி வாரமும், விள்ளாச் சுற்றமும்
தந்திரம் புனர்ந்த மந்திர மாக்களம்
பலர்புகல் அறியா அவைபுகும் அரங்கில்,
நினைந்து ஆய்ந்து துணிந்து செயல்மணந்து இனிதுணர்ந்து,
நனவுஎனக் கனவின் நன்னடை வழாஅது
உரைத்தனன் சொப்பனத்து அகத்து இனிதிறந்த
மந்திரத் தலைவனும், வன்கடும்பு அதிபனும்,
அந்த பூமி மருங்கு போகிச்
சிந்தை மாத்திரம் கனவிலின் நனவில்
தந்துரை சுழுத்தி இன்நே மந்திரத்

தலைவற் றுணந்து விலைவரம்பு இல்லாச்
சிங்கம் சுமந்த ஐம்பேர் அமளிப்
பள்ளி மண்டபத் தானும், தானாது
திகிரி உருண்ட பெருவனப்பு ஏய்ப்ப
உறுதிச் சுற்றத்து எறிவளி எடுப்ப,
ஏற்றம் இழிவு அற்ற
இழிச்சொல் பழிச்சல் இன்பத் துன்பம்
ஒழித்தன்ன், தூரியத்து அழித்தினிது ஆதீதத்து
ஒருவகை எங்கணும் ஆகி இருள்இரி
சுடர்த்தெரிற் சாக்கிரத்து ஆங்கண் நான்கின்
இடைத்தகைத் தெரிதனிற் றெரியும் ஆறே,

– ஞானாமிர்தம்.

இங்ஙனம் ஞானாமிர்தம் கூறும் ஆன்மிக ஞான அனுபவச் செய்தியை, ஓரளவு எளிய மக்களும் உணர்ந்து கொள்ளும் படி கட்புலனாகிக் காட்டும் அரியதோர் அமைப்பே, தேர்த் திருவிழாவாகும்.

தோற்பவைக் கூத்தும், தொல்லை
மரப்பாரிற் செலவும் வேறாய்ச்
செலுத்துவோர் செய்தி தானும்
பார்பாய வேடம் கட்டி
ஆடுவோர் பரிசும் போலும்,
ஆர்ப்பாய காயம் தன்னை
ஆன்மாநின்று ஆட்டு மாறே.

படைகொடு பவனி போதும்
பார்மன்னன் புகும்போதும் இல்லில்
கடைதொறும் விட்டு விட்டுக்
காவலும் இட்டுப் பின்னர்
அடைதரும் தனியே அந்தப்
புரத்தினில், அதுபோல் ஆன்மா
உடலினில் அஞ்சு அவத்தை
உறும், உயிர் காவல் ஆக,

எனவரும் சிவஞானசித்தியார் சுபக்கச் செய்யுட்கள் (214, 222) இரண்டும், இக் கருத்தை வலியுறுத்தும் சான்றாகும்.

முன்னைய செய்யுட்கண், உயிரானது தூல வுடலை இயக்கும் தன்மை, ஒரு பெரிய தேரானது தரையில் ஊர்ந்து செல்லுதல் போலும் என்னும் கருத்தில், "ஆர்ப் பாயகாயம் தன்னை ஆன்மா நின்று ஆட்டுமாறு, தேர் பாரிற் செல்லும் பரி போலும்" என அருளிச் செய்யப் பெற்றிருத்தல் காணலாம் பின்னைய செய்யுளின் கண், உயிரை அரசனாக உருவகம் செய்து, உயிரானது உடலை இவர்ந்து ஊர்ந்து செலுத்தும் தன்மையை "மன்னன் படை கொடு பவனி போதல்" போலம் என்று குறிப் பிட்டிருத்தல், ஊன்றி உளங் கொள்ளத்தக்கது.

திருத்தேர் விளக்கம் :

தேரின் அமைப்பு உறுப்புக்களும் பற்றி, வேறு சில விளக்கங்களும் கூறப்படு வதுண்டு. மந்தரகேசரி மலைகள் அச்சு, சூரிய சந்திரர் சக்கரம், ஆறு பருவங்கள் சந்தி, பதினான்கு உலகங்கள் பதினான்கு தட்டுகள், ஆகாயம், ஆசனம், உதயகிரி அஸ்த கிரிகள் கூவிரம், நதிகள், கொடிகள், நட்சத்திரங்கள், விதானம், மோட்ச உலகம் மேல் விரிவு, யாகங்கள் சட்டம், நாள் முதலியன குறுக்கு மரங்கள், அஷ்ய மலைத்தூண்கள், அஷ்டதிக்கு யானைகள் தாங்கும் ஆதாரங்கள், ஏழு கடல்கள் தேர்ச் சீலைகள், கன்ம ஞானேந்திரியங்கள் கலங்கள், கலைகள் முளைகள், வேதாந்த உபாங்க மனு சாத்திரங்கள் மணிகள், வாயுக்கள் படிகள், நான்கு வேதங்கள் குதிரைகள், கங்கை முதலிய தேவமாதர்கள் சாமர மிரட்டுவோர், ஊர்வசி முதலிய கணிகைமகளிர் நடனம் புரிவோர், மேரு மலை வில், சரசுவதி வில்லிற்கட்டிய மணி, வாசுகி நாண், விஷ்ணுபாணம், அக்கினி தேவன் பாணத்தின் முனை, வாயுதேவன் அம் பிறகு. பிரமன் சாரதி, திரிபுரங்கள் மும்மலம், தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன் மாலி எனும் மூவசுரர்களும் விஞ்ஞான கலர், பிரளயாகலர், சகலர் எனும் மூவகையான்மாக்கள் தேவபதம் மோட்சபதமாகியன திருவடி எனப் பெரியோர்கள் கூறுவ துண்டு.

மற்றொருவகை, உச்சிக்குடை பிரமரந் திரம், கலசம் சோடசாந்தத்தினம், மேலு ள்ள முதலா மடுக்கு துவாதசாந்தத்தானம், இரண்டாம் அடுக்கு மஸ்தக ஆதித்தானம், மூன்றாம் அடுக்கு மஸ்தக மத்தியத்தானம், நான்காம் அடுக்கு மஸ்தகாந்த ஸ்தானம், ஐந்தாம் அடுக்கு லலாடமத்தி, ஆறாம் அடுக்கு புருவமத்தி, நடுவேயுள்ள ஏழாம் அடுக்கான 32 குத்துக்கால்கள் 32 தத்துவம் முற்றுறைகள் கண்கள், பிற்றுறைகள் சிகைகள், பாகத் துறைகள் இரு செவி, பீட முதற்பகுதி வாய், இடப்பக்கத்திலுள்ள இரு குதிரை வடிவங்கள்

இடப்பாக சூரிய சந்திர கலாவாசிகள், வலப்பக்கத்துள்ள இரு குதிரை வடிவங்கள் வலப்பாக சூரிய சந்திர காலாவாசிகள், சாரதி வடிவம் மும்மல ரூபமும் நாசியுமாகும், எட்டாம் அடுக்கு இடப்பகுதி அந்தக்கரண சொரூபம். இது கண்டத்தானமாகும். அதன் கீழ் இடப் பகுதி ஐந்தவத்தை, ஐங்கோசம், இராகாதி பதின் மூன்று அதன் குணாங்களுமாகும். இது இருதயம், கீழ்ப்பகுதி தசேந்திரியமும் நாபித்தானமுமானும். அதன்கீழுள்ள அச்சு பஞ்ச பூதம் குண்டலினி சத்தித்தானம் என்பனவாகும். சக்கரங்கள் தசவாயுக்களும் இரு கால் களுமாகும், இவ்வாறு தேரானது பிண்டவடிவமாகும்.

ஆகவே சக்கரங்களாகிய தசவாயுக் களை நிறுத்த, அசைதல் முதலிய வினைகள் ஒழியும். சீவன் தன்மனத்தை முறையே மேலாக விளாங்கும் உந்திக் குண்டலியிலிருந்து நாபிக்கும் பின் இருதயத்துக்கும், அங்கிருந்து கண்டம், வாய், நாசி, இருகண் இவை களின் வழியாக மேனோக்கி லயப்படுத்தி, அங்கிருந்து ஆறாம் அடுக்காகிய புருவ மத்தியிலும் அங்கிருந்த ஏனைய அடுக்காகிய புருவமத்தியிலும், அங் கிருந்து ஏனைய அடுக்குகளாகிய மஸ்தக அந்தம் மத்தி ஆதித்தானாங்களிலும், துவாத சாந்தத்திலும் லயப்படுத்தி, அங்கிருந்து உச்சிக்குடையாகிய பிரமரந்தரத்தில் ஏற்றி லயப்படுத்தப் பர மானந்த ரூபியாக வேண்டும் என்பதையே தேரின் அமைப்பும் உறுப்பும் குறிக்கின்றன.

முடிவுரை :

இத்தகைய பற்பல உயரிய தத்துவ நுட்பங்களை உணர்த்தும் முறையில் தேர் திருவிழா அமைந்துள்ளது. ஊர்மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து, அன்புடன் கூடித் தேரை இழுத்து, வலம் செய்வித்து இறைவனை வழிபட்டு மகிழ்கின்றனர். இதனால் மக்களிடையில் உள்ள வேறுபாடுகள் அனைத்தும் நீங்கி, மக்கள் அனைவரும் அன்பி னால் ஒன்றுபட்டு, இன்பம் எய்தி மகிழ்ந்து வாழ்வதற்கு, தேர்விழா பெரிதும் துணை புரி கின்றது. இத்தகைய தேர்விழாக்கள் எங்கும் இனிது நடைபெற்று மக்கள் அனைவரும் ஒன்று பட்டு மகிழ்ந்து இன்புற்று வாழ எல்லாம் வல்ல இராம லிங்கேஸ்வரர் திருவருளைச் சிந்தித்து வந்திப்போமாக.

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் பனைந்த பெருமான் குமரன்க் ருபாகரனே

அழித்துப் பிறக்கவொட் டாவியில் வேலன் கவியையன்பா
லெழுத்தும் பிழையறக் கற்கின்றி லீரொரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவென் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுங்குமன் றேகவி கற்கின்றதே

தேரணி யிட்டு புராமரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டன வாகிக் கிரௌசஞ் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்ததுசூர்ப்
பேரணி கெட்டது தேவேந்தி லோகம் பிழைத்ததுவே.

– கந்தலங்காரம்

காவலா முருகா உன்மேற் காதலால்ப் பக்தரெல்லாம்
தூரவே இருந்துமுன்னைத் துரந்துமே ஈந்தசெல்வப்
பேளையால்க் கண்டவிந்தப் பெருந்தவத் தேரிலேநீர்
மாதரார் மகிழநீவிர் மகிழ்ந்ததன் மேலேயாக
நாதனே குகனே வேலா நாம்வடம் பிழத்து மீட்ட
பாவலா கருவா பள்ளம் புலத்தவா எம்மைக்காக்க
வீரவேற் கரத்தா எங்கள் வினைதனைக் களையவீதி
ஓடிவா முருகா நாமும் ஓங்கிட ஆடிவாடா.

அன்னதானத்தின் மகிமை

பக்தன்

" உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே...! என்கின்றார் சீழ்த்தலைச்சாத்தனார்.

"படமாடக் கோயிற் பகவத் கொண்நீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கது வாக
நடமாடக் கோயில் நம்பர் கொன்றீயில்
படமாடக் கோயிற் பகவற்க தாமே.!"

என்பது திருமூலர் வாக்காகும். ஐயன் அளந்த அருளால் கொண்டு அண்டமெல்லாம் உய்ய அறம் செய்யுமுனைப் போற்றி முப்பத்திரண்டு அறங்களையும் இறைவனளித்த அருளான நெல்லைக் கொண்டு இயற்றுபவள் காஞ்சித்தாய் காமாட்சி. இவ்வறங்களுள் தலையாயது பசிப் பிணி நீக்கல். இதில் தாகசாந்தி, அன்னதானம் அடங்கும். இறைவன் வெளிப்பட்டு நிற்குமிடங்கள் இரண்டு. ஒன்று படமாடக் கோயில் – தத்துவங்களைக் காட்டும் மாடங்களையுடைய ஆலயங்களினதும், ஆறு ஆதாரங்களான மூலாதாரம், சுவாதிட் டாணம். மணிபூரகம், அநாகதம், விசுத்தி, அனுக்ஞை என்ற உயிர் நிலைகளையுடைய நடமாடும் கோயிலான சரீரத்துவமாகும். திருமூலர் வாக்கினால் நோக்குமிடத்து ஆலயங் களில் உள்ள இறைவர்க்கும் நாம் ஒன்றை வழங்குவது சரீரக கோவிலில் நடமாடித்திரியும்.

உண்ணுகிறான் உறங்குகிறான்
உருவம் தேரோடுகிறான்
சங்கீதத்தை மீட்டுகிறான்
தானே தீபம் காட்டுகிறான்
மங்கையுன் கூட்டுகிறான்
மலைக்கக் கண் காட்டுகிறான்
அங்க லிங்க ரூபமாக இங்கு அங்கும்
ஆள் அசைந்து.....
மாயவித்தை செய்கிறானே அம்பலவாணன் – மாயவித்தை செய்கிறானே – முத்துத் தாண்டவன்

அந்த அம்பலவாணருக்கு - அளிப்பதாகும் நடமாடக் கோயிலுள்ள ஜீவன்களுக்கு அளிப்பது படமாடக் கோயிலும் வாழும் இறைவனுக்கு அளிப்பதாகும். இதனை அன்பு நிறைந்த ஜீவனும் அருள்நிறைந்த சிவமும் ஒன்றே எனவும் அன்பே சிவம் எனவும் வலியுறுத்துகிறார் இவ்வருளாளர் மேலும் அவர் வாக்கில் பார்க்கும் போது.

"உணர்ந்தேன் உலகில் ஒரு பொருளானை
கொணர்ந்தேன் குவலயங் கோயிலென் நெஞ்சம்
புணர்ந்தேன் புனிதனும் பொய்யல்ல மெய்யே
பணிந்தேன் பகவனுன் பாட்டு மொலியே..."

மேலும் உள்ளப் பெருங்கோயிலில் உறைகின்ற எம்பெருமானைத் தேடியலைகிறார் பட்டினத்தார்.

"ஓடாமல் ஓடி உலகை வலம்வந்து
சுற்றித் தேடாமல் என்னிடமாய்
தரிசிப்ப தெக்காலம்"

இறைவன் காயத்தையே கோயிலாய் கொண்டுள்ளான்.

"காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மண மணிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலாய் நிறையநீர் அமைய வாட்டி
பூசனை ஈசனார் க்கு போற்றுவிக் காட்டி னோமே...." - அப்பர் சுவாமிகள்

மறவாமை யானைமைத்த மணக் கோயிலி லுள்ளிருந்து
யுறவாதி துணையுரை ஒளிவிளக்குடன் ஏத்தி
யிறவாத வானந்த மெனுந்திருமஞ்சனையாட்டி
யறவாணர்க்கு அன்பனெனும் அமுதத்தை அர்ச்சனை செய்வார்
- சேக்கிழார்.

" தம்முள்ளத் துற்ற சவண சிவ லிங்கத்துள்
தம் என்பர் அர்ச்சிக்கத் தாம்...!"

- சைவசமய நெறி.

"இது அவன் திருவுரு இவன் அவன் எனவே....."
"உடலிடம் கொண்டாய் யான் இதற்கு இலனோர் கைமாறு....

- மாணிக்கவாசகசுவாமிகள்

மாயனை நாடி மணநெடுந்தேரேறிப் போயின நாடறியதே புலம்பவர் தேயமும் நாடுந் திரிந் தேன்கள் செல்வனை காயமிந் நாட்டிடை கண்டு கொண்டேனே....

-திருமந்திரம்

"நெஞ்சமே கோயிலில்நினைவே சுகந்தம் அன்பே அஞ்சணநீர் பூசை கொள்ளவாராய் பராபரமே...." - தாயுமானசுவாமிகள்

"க்ருதமிவ பயஸி நிகூடம் பூதே பூதேச வஸதி மநஸி மந்தமிதவ்யம் மகோ விஜ்ஞானம் மந்தா நபூதே...."

பாலில் நெய் இரகசியமாக மறைந்திருப்பது போல் சகல ஜீவராசிகளிலும் பரப்பிரமத்தின் அம்சமாகிய ஸீவாத்மா மறைந்து கலந்துள்ளது.

அகரமாயிரம் ஆசிரியர் கியிவென் சிகரம் ஆயிரம் செய்துமுடிக்கிலென்
பகர ஞானி பகலூாண் பகவத்துக்கு நிகரில்லை என்பது நிச்சந்தானே - திருமூலர்

கோயில்கள் ஆயிரம் அமைத்து விழாப் பொலிவு காண்பதைவிட இறைவனடியார்க்கு ஒரு பகலுணவு கொடுப்பது ஆயிரம் மடங்கு பெரும் புண்ணியம் நிறைந்தது.
"அன்புடைத் தொண்டர்க்கு அமுதளித்து இன்னல் களைவன் அன்னம்பரான் இணையடியே...." - அப்பர் சுவாமிகள்

ஒரு கால் பஞ்சத்தால் வாடியமக்கள் பசிபோக்க வேண்டுகின்றான் காளிதேவி பக்தரான இராமபிரசாதர் அன்னம் தா அன்னம் உலகுக்கு அன்னை என்னதான் தவறு நான் செய்தாலுமே பெற்றவள் அல்லவோ பிழை பொறுப்பாய்

பற்றி எரியும் என்பசிதீயை
இன்னருள் தீர்த்தே தணித்திடுவாய்...." - அன்னந்தா அன்னம்

"மண்ணிற் பிறந்தார் பெறும்ப மதிகூடும்
அண்ணவாள் அடியார்ந்தமை அமுது செய் வித்தன்
கண்ணினாலவன் விழாப் பொலிவு கண்டா னித்தன்
உண்மையா மெனில் உலகர்முன் வருகென வுரைப்பார்..."

என்பது ஆளுடைப்பிள்ளையிற் அருள் வாக்கண்றோ பிள்ளைவாக்கைப் பிரித்துப் பார்க்கும் போது எமக்கு இந்தமண்ணிற்கு வந்தமைக்கு கடமைகள் உண்டெனக் காட்டு

கின்றார் ஒரு கடமை- முதன் கடமை இளம்பிறைச் சந்திரனை முடியில் அணிந்த அச்சி வன் அடியார்க்கு அமுது செய்வித்தல் அடுத்தது எம்பிரானுக்கு விழாக்கள் எடுத்த அனுகை கொலுவிருத்தி அவர் பொலிவுகண்டு மனம்களிப்புற வேண்டும்.

இந்த இரண்டு சிறப்பையும் அள்ள அள்ளக் குறையாத ஆறாத அப்பன் சோறு எனப் போற்றப்படும். திருநாவுக்கரசர் குருபூசையினை திருவிழி நிகழ்வாய் 100 ஆண்டிற்கு மேல் செய்து வருபவர்கள் எம் குடிமக்கள் கோடிக்கணக்கில் திருப்பணி கண்டு அப்பன் விழாப்பொலிவு கண்டின்புறுபகவன் ஆம் ஆளடைப்பிள்ளை கூறும் கடமைக்கு இலக்கணமாய் வாழ்பவர் எம் கிராம மக்களே....
என்றால் மிகையாகாது.
சிவபுண்ணியத் தெளிவு என்னும் நூல் இப்படியான சிவத்தொண்டு செய்வோர் அடையும் பலன் பற்றி மிகத் தெளிவாய் கூறுகின்றது. சிவபெருமானுக்கும் சிவனடியாருக்கும் பொண்ணும் மணி யும் கொடுப்போர் இகபரம் சுகம் பெறுவர் எனக் கூறுகின்றது.

மனிதன் ஆசையின் வடிவம் பொரிமாத் தோண்டியின் கற்பனை இதற்குப் பொருந்து மன்றோ. இரவோடிரவாய் எப்படிப்பணம் தேடலாம் என்பதுவும் பணமே எல்லாம் என எண்ணும் சமுதாய் அமைப்பை இன்று வளர்ந்து அறப்பணிகள் தேய்ந்து கொண்டிருப்பது எம்போன்றோர்க்கு கவலையளிப்பதாகும்.

அன்னதானத்தின் பெரும் சிறப்பு ஒரு தானத்திற்கும் இல்லை அது தான் போதும் என்று ஏற்பவன் எண்ணும் சிறப்பு. நாம் எவருக்காயினும் எதைக் கொடுத்தாலும் போதா தென்பார். வாங்குபவர், ஆனால் தாகசாந்தியின் போதும் அன்ன தானதின் போதும் மட்டும் என்போரும் போதும்" என்பர். போதுமென்னும் மனம் பொன் செய்யும் மருந்து அடுத்த சிறப்பு ஆலயங்ளில் இடம்பெறும் அன்னதானத்தில் ஆண்டவன் அடிமையென்ற மனநிறைவாலும் சமபந்தி போசனம் நடைபெறுகின்றது. ஆலயத்தில் தாமாகவே அதனை வழங்குபவன் கொடுப்பதால் அவர்மனத்தில் நான் வழங்குகிறேன். தானம் என்ற ஆணவம் நீங்கி விடுகிறது. இது ஏற்பவர் மனத்திலும் இறைவன் தந்த சாதமாய் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எந்தத்தயக்கமுமின்றி எல்லோரும் கூடியிருந்து பகிர்ந்து சாப்பிடு வதும் தனி மகிழ்வன்றோ. எனவே இதுவரை எடுத்தாண்ட ஆதாரங்களின் மூலம் நாம் மனத்திருந்த வேண்டுவது சமயப்பணி - சுமூகப்பணி இரண்டிற்கும் தலையாயது அன்னதான அறப் பணியே....
"அப்பூதி அடிகளார் அடிபோற்றி னோற்றிடும்
அடியார் கிறைத்தபதி - பள்ளம்புலம் முருகமூர்த்தி

நன்றியுரை

எல்லாம் வல்ல எம்பெருமான் முருகனின் பெருங்கருணையை மனதார வேண்டிக் கொண்டு, இவ்வருட 2009ம் ஆண்டுப் பெருவிழாவானது மிகவும் முக்கிய சிறப்பம்சங்களை தன்னகம் கொண்டு மிளிர்கின்றது. எம்பெருமான் கருணை கைகூட கலியுகவரதனாம் கந்தனை இதுவரை காலமும் பழமையும் எளிமையும் கொண்டு விளங்கிய கட்டுத்தேரிலே எழுந்தருளச் செய்து நாம் பெருவிழாக் கண்டு இன்புற்றோம்.

அவ்வண்ணம் எம்பெருமான் பவனிவந்த கட்டுத்தேரின் பழமையும் இடம் பெயர்வு காலத்தில் ஏற்பட்ட பராமரிப்பின்மையால் காணப்பட்ட நலிவும் காரணமாக தொடர்ந்து அந்தத் தேரினை பாவிக்கக்கூடிய வளம் இன்மைகருதி எமது அறங் காவற் சபையினர் புதிதாக எமக்கேற்ப ஓர் புதிய சித்திரத் தேரினை அமைத் தால் நல்லது என எண்ணங்கொண்டோம். அவ்வெண்ணத்தினை எமது ஆலய நலன் கருதிச் செயற்படும் பொதுச்சபைப் பிரதிநிதிகளின் எண்ணக் கருவிற்குக் கொண்டு வந்து ஆலோசித்த விடத்து அதற்கு ஏகமனதான ஆதரவும் நம்பிக்கையும் ஊட்டப் பட்டது. அந்த மனப்பூர்வமான அங்கீகாரத்தின் துணையுடன் துணிவு பெற்று அதற் கான ஆயத்த நடவடிக்கைகளை நாடும் இடத்தில் இன்று இச்சித்திரத் தேரின் நிறைவு, மலர் வெளியீடு வரை துணைநின்ற மலைபோன்ற பெருந் துணையாளர் அனைவரையும் இன்நேரம் நன்றியுடன் நினைவு கொண்டு மனமார நன்றியி னைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இவ்விடத்தில் எமது இப்பெருமுயற்சியினை இன்று இப்பெருவிழாப் பிரதம குருவாகவும், பண்டுதொட்டு இன்றுவரை இவ்வாலயத்தின் பிரதம குருவாகவும் இருந்து எமக்கெல்லாம் நல்ஆலோசனை வழங்கும் மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய குருவாம் சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்கள் அவர்கள் இந்த எண்ணத்தினைக் கேட்டறிந்து தனது நல்லாசிகளை தெரிவித்ததுடன் எம் நிதிவளங்கண்டு எம்மைத் தைரியப்படுத்த எம்பெருமான் முருகனின் கருணாசக்தியைக் கூறி இம்முயற்சிக்கு ஊக்கம் தந்த உத்தமராக நின்றமையுடன், இன்றைய இந்த திருத்தேர்ப் பெரு விழாவினை நடாத்திக் கொண்டிருப்பதையிட்டு அவருக்கு எமது அறங்காவற் சபையின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மேலும் எமது இப்பணி தொடர்பாக தொலைபேசி, விளம்பரப்பத்திரிகை என்பவற்றினூடாக எமது எண்ணக் கருவை வெளிநாடுகளில், வெளிமாவட்டங் களில் வாழும் எமது முருகன் அடியவர்களிற்கு தனித்தனியாகவும், அவரவர் உறவினர்களினூடாகவும் தெரியப்படுத்திய இடத்து அங்கிருந்து எம்மை ஊக்கு வித்ததோடு அல்லாமல் தம்மாலான நிதியினைத் தந்தும், தம்முயற்சியினால் நிதியினைச் சேர்த்தும் அவ்வவ் போது வழங்கி இப்பெரும் பணியைத் தொடர் வதற்கு தைரியத்தினையும் நம்பிக்கை ஒளியினையும் தந்து உதவிய முருகன் அடியவர்களிற்கும், அத்துடன் இப்பணியின் பழு உணர்ந்து தம்மாலான நிதியுதவியை தாமும் தந்ததோடு மட்டுமல்லாமல் வெளியிடம் வாழ்ந்து கொண்டிருப்பவர்களிடமும் இதுவிடயத்தில் ஊக்கமளித்த எம் கிராம மக்களிற்கும் நன்றியினைத் தெரிவிப்பதோடு

முக்கிய தளமாக இத்தேர்த்திருப்பணியில் எம்முடன் இணைந்து கொண்ட ராஜன் சிற்பாலய உரிமையாளர் "சித்திரத்தேர்க் கலைஞானி" தம்பி இ.பிரபாகரன் அவர்களும் அவர்களது உறவினர்களும் எமது இப்பணியில் அன்பிற்கும், பண் பிற்கும் நாணயத்திற்கும் இலக்கணமாக எமது குறுகியகால இடைவெளியில் பெருந்திருவிழாவிற்கேற்ப எந்தவித தடங்கலுமின்றி அவ்வப்போது அமைய வேண்டிய நாள்வேலைகள் முதல் பூர்த்தி காண்வேலைகள் வரை எமக்கு இசைந் தாற்போல இச்சித்திரத்தேரினை அமைத்துத் தந்தமையை எண்ணி தம்பி பிரபா கரன் அவர்களிற்கும் அவர்தம் உறவினர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், இச்சித்திரத் தேரின் வர்ணவேலைகளை முன்நின்று நடாத்தி தம்பி தே.தனகாசலம் (ரவி ஆட்ஸ்) அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், இச்சித்திரத்தேரின் தரிப்பிடமான தேர்முட்டிக் கட்டிட வேலைகளை குறுகிய காலத்திற்குள் சிறந்த முறையில் தமது குழுவினருடன் மலர்ந்த முகத்துடன் ஆக்கித்தர அயராது உழைத்த தம்பி பாஸ்கரன் அவர்களிற்கும் அவர்தம் குழு வினருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் மேலும் அத்தேர் முட்டிக் கொட்டகை வேலைகளை மலர்ந்த மனத்துடன் குறுகியகால இடைவெளியில் அமைத்துத் தந்த அண்ணர் இராசையா அவர்களிற்கும் அவருடன் சேர்ந்து உழைத்த சக குழு வினருக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அது மட்டுமன்றி நிதியுதவி மட்டுமல்லாது எமது தேட்முட்டி வேலைக்குத் தேவையாக இருந்த மூலப் பொருட்களான கல், அரிகல், பனைமரம், சீவிப் பாவனையில் இருந்த மரங்கள், ஓடுகள் என்பவற்றை தந்துவிய எமது நிதிப் பழுவைக் குறைத்த முருக சிந்தனையாளர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

மேலும் எமது ஆலயத்தில் இடம்பெற்ற பவளக்கால் பொருத்தும் வைபவத்தின் போது பல்திசையிருக்கும் அழையாமலே தாமாகவே முன்வந்து அந்தப் பெரும் பொறுப்பான விழாவை தம் உடல் வியர்வை சிந்த நின்று உழைத்து முருகனின் சித்திரத் தேரினைப் பூ ரணப்படுத்திப் பார்க்க சமூகம் கொடுத்த முருக பாலகர்களுடன்அவர்களுள் ஒருவராக நின்று அவ்விழாவினை ஒளிப்படப் பிடிப்பில் போட்டோப் படப்பதிவு செய்த தந்த அடியவர் அவர்களிற்கும் எம்பெருமான் முருகன் நீண்ட ஆயுளும் நிறைந்த ஆரோக்கியமும் வழங்கப் பிரார்த்திப்பதோட எமது இந்தச் சித்திரத்தேர் மலரினை அலங்கரிப்பதற்காக அழகுமிகு நறுமண ஆக்க இதழ்களை வழங்கிச் சிறப்பித்த பெரியோர்களிற்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு

இச்சித்திரத்தேர் அமைப்பு சம்பந்தமான தேவைப்பட்ட உடலுழைப்பிலும் பெருவிழாத் தொடர்பாக ஏற்பட்ட ஆலயம் சார் சிரமதானப் பணிகளிலும் தாமாகவே முன்வந்து எம்மடன் இணைந்து செயற்பட்ட தாமாக ஏவாமலே செயற்பட்டு ஆலய வீதிகளை அழகுபடுத்தி உதவிய எம்கிராம மக்களிற்கு நன்றியைத் தெரிவிக்கும் பேறை எமது ஆலயத்தில் நடைபெறும் நித்தியபூசைகளைச் செவ்வனே நடாத்திக் கொண்டிருக்கும் இளம்குருவாம் ம.பிரபாகரக்குருக்கள் அவர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு

எமது இப்பணியின் கண்ணே எமது மனக்கண்ணிற்கு எட்டாமல் இறைபணியில் ஈடுபட்டு இன்நன்றியறிதலில் தவறவிடப்பட்ட அனைவரும் எமது தவறை மன்னித்து எல்லோரும் எம்பெருமான் முருகனின் அருட்கடாட்சத்திற்கு உட்படப் பிரார்த்தித்தும் எமது நன்றியினைக் கூறிக்கொண்டு அமைதியினை வேண்டி "இன்பமே சூழ எல்லோரும் வாழ்..." எம்மிறையாம் முருகனை வேண்டி இன்நனறியுரையை நிறைவு செய்து கொள்கின்றோம்.

செயலாளர்
அறங்காவற்சபை

சித்திரத் தேரிற்கு முன்னதாக முகப்பிடியான் பவனிவந்து கட்டுத்தேர்.

அச்சமைப்பு: முதி கலர்ஸ் நல்லூர். 021 2229285